721



721
3-53

# பாப்பாத் தமிழ் வாசகம்

## மூன்றும் புத்தகம்

★

ஆசிரியை :
V. G. லீலா B.A., B.T.

பதிப்பாசிரியர் :
T. P. மீனாட்சிசுந்தரனார், M.A., B.L., M.O.L.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 ... 1955
MADRAS

...ணை பப்ளிகேஷன்ஸ்
: : சென்னை—17

T3
031(3)
N55

# பாப்பாத் தமிழ் வாசகம்

## மூன்றும் புத்தகம்

ஆசிரியை:
V. S. லீலா B. A., B. T.
பதிப்பாசிரியர்:
T. P. மீனாட்சிசுந்தரனார் M. A., B. L., M. O. L.

அருணா பப்ளிகேஷன்ஸ்
தியாகராயநகரம் : : சென்னை-17

பதிப்புரிமை/ 1955 [ விலை அணா 8

முதற் பதிப்பு — அக்டோபர் 1952
இரண்டாம் பதிப்பு—மே 1953
மூன்றும் பதிப்பு — ஜூலை 1955

148405

## நன்றியுரை

இந் நூல்வரிசையில், தமது பாடல்களைச் சே துக் கொள்வதற்கு அன்புகூர்ந்து அனுமதி வ கிய பெரியோர்களுக்கு எமது ஆழ்ந்த ந உரியது.

—பிரசுரகர்த்

03(3)
N55

பாரதி பிரிண்டர்ஸ், சென்னை—1.

# முன்னுரை

'பாப்பாத் தமிழ் வாசகம்' என்னும் இந்நூல் வரிசை, ஒன்று முதல் ஐந்து வகுப்புகளுக்கு, அரசியலாரது பாடத் திட்டத்தைத் தழுவி எழுதப்பெற்றுள்ளது. தாய் மொழியாகத் தமிழ் மொழியைக் கற்பிப்பதற்கு உகந்த முறைகளை இவ்வரிசையில் காணலாம். குழந்தைகளின் மனத்தைக் கவருவதற்கு என்றே படங்கள் ஏராளமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. அவர்களுடைய 'சொற்களஞ்சியம்' விரிவடைவதற்குத் தகுந்த முறையில் பாடங்கள் அமைந்துள்ளன.

தமிழ்நாட்டுக் குழந்தைகள் இந்நூல் வரிசை வாயிலாகத் தமிழ்ச் சுவை பெறவேண்டும் என்பதே எமது அவா.

சென்னை,<br>
1—7—'55.

பதிப்பாசிரியர்

# பொருள் அடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பயிர்த் தொழில் | ... | 5 |
| 2. | வாழை மரம் | ... | 9 |
| 3. | பொங்கல் பண்டிகை | ... | 12 |
| 4. | பொங்கல் பொங்க வேண்டும்—(ஜோதி) | ... | 15 |
| 5. | போலிப் பூசாரி | ... | 17 |
| 6. | கோதுமை | ... | 21 |
| 7. | மயில் | ... | 25 |
| 8. | மயில் பாட்டு—(சுத்தானந்த பாரதி) | ... | 29 |
| 9. | மாலை வேளை | ... | 31 |
| 10. | நீதிமொழிகள் | ... | 35 |
| 11. | குழந்தை காந்தி | ... | 36 |
| 12. | காந்தியின் பேச்சு—(கொ. சுப்பு) | ... | 40 |
| 13. | பென்சில் சொன்ன கதை | ... | 43 |
| 14. | கடிதம் எழுதுதல் | ... | 47 |
| 15. | பனிநிலச் சிறுவர் | ... | 52 |
| 16. | நற்பழக்கம்—(நாமக்கல் கவிஞர்) | ... | 55 |
| 17. | பலசாலி யார்? | ... | 57 |
| 18. | நான் யார்? | ... | 62 |
| 19. | மழை உண்டாகும் விதம்—(உரையாடல்) | ... | 64 |
| 20. | பூமி குளிர்ந்தது— | ... | 68 |
| 21. | உப்பு | ... | 70 |
| 22. | துஷ்டருடன் உறவாடாதே | ... | 74 |
| 23. | உண்மையுள்ள வேலைக்காரன் | ... | 78 |
| 24. | யாவரும் ஓர் குலம்—(பாரதியார்) | ... | 82 |
| 25. | கோபு கண்ட கனவு | ... | 84 |
| 26. | பரமன் பெற்ற பரிசு | ... | 88 |
| 27. | சிங்கமும் முயலும்—(சிறு நாடகம்) | ... | 92 |
| 28. | செய்யுள் பாடம் | ... | 97 |

# பாப்பாத் தமிழ் வாசகம்

மூன்றும் புத்தகம்




## 1. பயிர்த் தொழில்

1. பாரத நாடு நமது நாடு. நமது நாட்டின் தொழில்களுள் பயிர்த்தொழில் முக்கியமானது, பயிர்த்தொழில் செய்பவர் உழவர். அவர்களைக் குடியானவர் என்றும் சொல்லு

வார்கள். பயிர்த்தொழில் வயல் நிலத்தில் செய்யப்படும்.

2. நிலம் **நன்செய், புன்செய்** என இரு வகைப்படும். ஆற்றிலிருந்தும், ஏரியிலிருந்தும் நீர் பாய்ச்சிப் பயிர் செய்யப்படும் நிலம் **நன்செய்**; இப்படிப்பட்ட நீர் வசதி இல்லாமல் மழை நீரால் பயிர் செய்யப்படும் நிலம் **புன்செய்**.

3, நன்செய் நிலத்தில் நெல், கரும்பு முதலியன விளையும். புன்செய் நிலத்தில் கம்பு, கேழ்வரகு, சோளம் முதலிய தானியங்கள் விளையும். உழவன் முதலில் நிலத்தை ஆழமாக உழுவான். பின்பு நிலத்திற்கு எருப் போட்டு, நீர் பாய்ச்சி விதை விதைப்பான். விதை முளைத்துப் பயிர் ஆகும்.

4. நன்செய் நிலத்திற்கு அடிக்கடி தண்ணீர் பாய்ச்ச வேண்டும். புன்செய் நிலத்திற்கு மழை நீரே போதுமானது. சில இடங்களில் கிணற்றிலிருந்தும் தண்ணீர் இறைப்பார்கள்.

5. நிலத்தில், பயிர்களுடன் புல் பூண்டுகளும் வளரும்; அவற்றை அடிக்கடி பிடுங்கி எறியவேண்டும். அவைகளுக்குக் **களைகள்** என்று பெயர். களைகள், பயிர்களுக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீரைத் தரையிலிருந்து இழுத்துக்கொள்ளும்.

ஆகவே, அடிக்கடி களை பிடுங்காவிட்டால் பயிர்கள் நன்ருக வளரமாட்டா.

6. பயிர்களில் தோன்றும் கதிர்களில் தானிய மணிகள் இருக்கும். கதிர்கள் முற்றியதும் அவற்றைத் தாளோடு அறுத்துக் களத்தில் போட்டு, அடித்து, மணிகளைப் பிரிப்பார்கள். பின்பு தானியத்தை நன்ருகத் தூற்றிப் புடைத்துக். குவிப்பார்கள். இதற்கு **அறுவடை** என்று பெயர்.

7. நாம் உயிர் வாழ்வதற்கு உணவு அவசியம். அந்த உணவைப் பயிர்த் தொழில் செய்து பெறுகிரேம். எனவே பயிர்த்தொழில் முதன்மையான தொழில்.

### "உழவுக்கு வந்தனை செய்வோம்"

| | | |
|---|---|---|
| பாரதம் | கம்பு | வளரமாட்டா |
| நாடு | கேழ்வரகு | கதிர் |
| முக்கியமானது | சோளம் | அறுப்பார்கள் |
| உழவர் | தானியம் | அறுவடை |
| நன்செய் | எரு | தாள்கள் |
| புன்செய் | போதுமானது | களம் |
| பாய்ச்சி | இறைப்பார் | முதன்மையான |
| நெல் | பிடுங்கி | அவசியம் |
| விளையும் | களைகள் | தூற்றி |

### கேள்விகள்

1. நிலம் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
2. நன்செய் புன்செய்களில் என்னென்ன விளையும் ?

3. களை என்பது என்ன? அதை ஏன் அகற்ற வேண்டும்?

4. அறுவடை செய்வது எவ்வாறு?

5. பயிர்த்தொழில் முதன்மையானது என்று எவ்வாறு சொல்லலாம்?

### பயிற்சி

1. அடியில் காணும் சொற்களுக்கு எதிர்ச்சொற்கள் எழுது:

விளையும், ஆகும், போதும், வளரமாட்டா, வேண்டும், நன்செய்.

1. கீழே காணும் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது:

முக்கியம், அடிக்கடி, புல் பூண்டு, அறுவடை, முதன்மை.

3. உன்னுடைய கிராமத்தில் நடைபெறும் தொழில்களில் நான்கு தொழில்களைப்பற்றி ஒவ்வொரு வாக்கியம் எழுது.

### இலக்கணம்

நன்செய் நிலத்தில் நெல் விளையும்: இதில் நான்கு சொற்கள் இருக்கின்றன. இது ஒரு வாக்கியம். இதில் கருத்து முடிந்துள்ளது. இவ்வாறு முற்றுப் பெற்ற கருத்தைத் தெரிவிக்கும் சொல் தொடருக்கு வாக்கியம் என்பது பெயர். 'நன்செய் நிலத்தில்' என்பது இரண்டு சொற்களால் ஆன ஒரு சொல் தொடர். இதில் கருத்து முற்றுப் பெறவில்லை. பொருள் முடிந்துள்ள வாக்கியத்தின் முடிவில் ஒரு புள்ளி (.) வைக்கிறோம். இதற்கு முற்றுப்புள்ளி என்று பெயர்.



## 2. வாழை மரம்

1. வாழை மரம் வீட்டின் முன் பின் புறங்களில் உள்ள தோட்டங்களிலும், தனித் தோட்டங்களிலும் வளர்க்கப்படுகின்றது. வாழை மரம் சீர்மையாகவும். பச்சென்றும் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். அது நமக்குப் பல வகைகளில் உபயோகப் படுகிறது.

2. வாழை மரத்திற்கு விதை கிடையாது, முதலில், நிலத்தில் ஆழமாகக் குழிகள் தோண்டி, அவற்றில் வாழைக் கன்றுகளை நடுவார்கள். பிறகு தினந்தோறும் தண்ணீர் பாய்ச்சுவார்கள்.

3. கன்றுகள் சில நாட்களில் குருத்துகள் விட்டு வளரும். கன்றிலிருந்து

தோன்றும் இலைகள் நான்கு பக்கங்களிலும் இருக்கும். ஏழு அல்லது எட்டு மாதங்களில் கண்ணுடி இலை என்ற ஒரு சிறிய இலை தோன்றும். அதன் பிறகு வாழை மரம் குலை தள்ளும்.

4. குலை தள்ளும் போது முதலில் வாழைப்பூத்தான் வரும். அது முற்றி வாழைக்காய் ஆகும். குலையில் காய்கள் சீப்புச் சீப்பாக இருக்கும். குலையில் இளம் பிஞ்சுகளின் சீப்புக்கள் பூவிதழ்களால் மூடப்பெற்றிருக்கும். நாளடைவில் பூவிதழ்கள் விரிந்து உதிரப் பிஞ்சுகள் முற்றிக் காயாகப் பருக்கும். பின்பு காய்கள் முற்றிப் பழம்ஆகும். வாழை மரம் ஒரு தடவைக்கு மேல் குலை தள்ளாது.

5. வாழை இலையில் நாம் சாப்பிடுகிறோம். வாழைப் பட்டையிலும் சாப்பிடலாம். பட்டைகளுக்கு உள்ளே தண்டு காணப்படும். வாழைப்பூ தண்டு, காய் இவை நல்ல பதார்த்தங்களாகும், வாழை நாரினுல் பூக்கட்டலாம். சிறுவர்களுக்கு வாழைப் பழம் மிகப் பிரியமானது.

6. வாழை நாரினுல் மெல்லிய ஆடைகள்கூட நெய்யப்படுகின்றன. வாழை மரங்களைக் கலியாணப் பந்தலில் கட்டுவார்கள்.

7. வாழையில் பல வகை உண்டு. மொந்தன், பூவன், ரஸ்தாளி, பேயன், விசிறி வாழை என்பன சில வகைகள்.

குருத்து
தடவை
உபயோகம்
ஆழமாக
குழிகள்
பட்டை
தோண்டி
மொந்தன்
பூவன்
நார்
மெல்லிய
ஆடை
ரஸ்தாளி
பேயன்
அவற்றில்
நாளடைவில்
முற்றி

### கேள்விகள்

1. வாழை மரம் எங்கெங்கு வளர்க்கப்படுகிறது?
2. வாழை மரத்தை வளர்ப்பது எவ்வாறு?
3. வாழை மரம் எப்பொழுது குலை தள்ளும்?
4. வாழை மரத்தின் உபயோகங்கள் யாவை?
5. வாழையில் உள்ள வகைகள் என்ன?

### தெரிந்து கொள்

| ஒன்று | பல |
|---|---|
| நாள் | நாட்கள் |
| முள் | முட்கள் |
| பல் | பற்கள் |
| கல் | கற்கள் |

### பயிற்சி

1. எதிர்ச் சொற்களை எழுது: வீடு, சிறிய, மெல்லிய.

2 உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது; மெல்லிய, ஆடை, சீப்புச் சீப்பாக, நாளடைவில்.

3. தென்னை மரத்தைப் பற்றிச் சொந்தமாக நான்கு வாக்கியங்கள் எழுது.

. கீழுள்ளவைகளில் கருத்து முற்றிய வாக்கியங்கள், கருத்து முற்றாத சொல் தொடர்கள் எவை?

(1) வாழை நாரினால்

(2) வாழையில் பலவகை உண்டு

(3) வாழை மரத்திற்கு விதை

(4) வாழைப் பூவின் நிறம் சிவப்பு

5. முற்றுப்புள்ளி இடு: வாழைப்பழம் இனிப்பானது அதன் விலையும் குறைவு அது உடம்புக்கு நல்லது



# 3. பொங்கல் பண்டிகை

1. சூரிய வெளிச்சம் இல்லாவிட்டால் பயிர் பச்சைகள் நன்ருக வளரமாட்டா. தை மாதத்திற்கு முன்ஞல் அறுவடை முடிவடையும். தை மாதம் முதல் தேதியன்று புதிய நெல்லரிசியில் சர்க்கரைப் பொங்கல் செய்து சூரியனுக்குப் படைத்து மகிழ்வார்கள். இதுவே **பொங்கல் பண்டிகை**. இதைச் **சங்கராந்தி** என்றும் சொல்வார்கள்.

2. நம் தமிழ் நாட்டில் இப்பொங்கல் பண்டிகை முக்கியமானது. பொங்கலுக்கு முன், வீடுகளைப் பழுது பார்ப்பார்கள்; வீடுகளுக்குச் சுண்ணும்பு அடிப்பார்கள். பொங்கலன்று வீடுகளைச் சுத்தம் செய்து, கோலம் போட்டு அலங்கரிப்பார்கள்.

3. பொங்கலன்று எல்லாரும் புது ஆடைகள் உடுத்துவார்கள்; புதிய மண் பாண்டங்களில் பொங்கல் இடுவார்கள். பொங்கல் பொங்கும்பொழுது எல்லாரும் கூவிக் களிப்பார்கள். பொங்கல் நாள் மங்களமானது.

4. பொங்கலுக்கு அடுத்த நாள் மாட்டுப் பொங்கல். அன்று மாடுகளைக் குளிப்பாட்டி அலங்கரிப்பார்கள். மாலையில் அவைகளைப் பொன்னேரில் பூட்டியும், வண்டிகளில் பிணைத்தும் ஓட்டி மகிழ்வார்கள்; பந்தயம் விடுவதும் உண்டு.

5. பொங்கல் பண்டிகை நாட்களில் பள்ளிக்கூடங்களுக்கு விடுமுறை. சிறுவரும் சிறுமியரும் அன்று களிப்புடன் இருப்பார்கள்.

**பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.**

| | | |
|---|---|---|
| பயிர் பச்சை | மங்களம் | அலங்கரிப்பார் |
| சுண்ணும்பு | அலங்காரம் | குளிப்பாட்டி |
| விடுமுறை | சிறுமியர் | பிணைத்து |
| நெல்லரிசி | பண்டிகை | தேதி |
| பழுது | கூவி | பந்தயம் |
| சிறுவர் | களிப்பு | பொன்னேர் |

**கேள்விகள்**

1. பொங்கல் பண்டிகை எப்பொழுது வருகிறது?
2. பொங்கலுக்கு முன்பு வீடுகளுக்கு என்ன செய்வார்கள்?

3. பொங்கல் பண்டிகையை எவ்வாறு கொண்டாடு கிறார்கள்?

4. மாட்டுப் பொங்கல் அன்று என்ன செய்வார்கள்?

## பயிற்சி

1. உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது: கூவி. பிணைத்து, சுத்தம், அலங்காரம், பந்தயம், விடுமுறை.

2. எதிர்ச்சொற்களை எழுது: முதல், மாலை, சுத்தம், முன்னால்.

3. தீபாவளிப் பண்டிகையைப் பற்றி நான்கு வாக்கியங்கள் எழுது.

4. மூன்று பண்டிகைகளின் பெயர்களை எழுது.

## இலக்கணம்

வீடு, பொங்கல், சுண்ணாம்பு, மாடு, பள்ளிக்கூடம்.

இவை பொருள்களின் பெயர்கள். இவ்வாறு ஏதாயினும் ஒரு பொருளின் பெயராக வரும் சொல் **பெயர்ச் சொல்** எனப்படும்.

1. கீழுள்ள வாக்கியங்களில் உள்ள **பெயர்ச் சொற்களை** எடுத்து எழுது:

(1) கந்தன் வீட்டிற்குச் சுண்ணாம்பு அடித்தான்.

(2) முருகன் பொங்கலுக்குப் புதுப் பானை வாங்கினான்.

(3) பல ஊர்களில் மாடுகளைப் பந்தயம் விடுவார்கள்.

2. கீழுள்ள வாக்கியங்களுக்கு **முற்றுப்புள்ளிகள் வைக்கவும்**: பொங்கல் பண்டிகை வருஷத்திற்கு ஒரு முறை வரும் அன்று பள்ளிக்கூடங்களுக்கு விடுமுறை நாள் பொங்கலுக்கு முன்னால் வீடுகளைப் பழுது பார்த்துச் சுத்தம் செய்வார்கள்






# 4. பொங்கல் பொங்க வேண்டும்

1. பொங்கல் பொங்க வேண்டும்
பூசை போட வேண்டும்;
மங்க ளங்கள் ஓங்க
வறுமை போக வேண்டும்.

2. பாலும் பொங்க வேண்டும்;
பசுவும் பொங்க வேண்டும்;
மேலும் மேலும் பூமி
விளைவு கூடவேண்டும்.

3. கரும்பு முற்றி நெல்லுக்
கதிரும் முற்ற வேண்டும்;
விரும்பும் பண்டம் எல்லாம்
வேண மட்டும் வேண்டும்.

4. காணும் மரம் எல்லாம்
கனி குலுங்க வேண்டும்;
பூணும் நகை யாவும்
பொன் சிறக்க வேண்டும்.—'ஜோதி'



| | | |
|---|---|---|
| மங்களம் | விளைவு | பொன் |
| கனி | பூணும் | விரும்பும் |
| வறுமை | கூடவேண்டும் | சிறக்க |
| குலுங்க | | |

### கேள்வி

1. பொங்கல் பண்டிகையால் நாம் அடையும் பயன்கள் யாவை?

### பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமைத்து எழுது:

(1) பொங்கல் தினத்தில் யாவரும் ——— இருப்பர். (கோபமாக, களிப்புடன்)

(2) பொங்கல் நாளில் மாடுகளுக்கு ——— (குளிப்பாட்டுவார்கள், தீனி போடுவார்கள்)

(3) பொங்கலுக்கு ——— என்றொரு பெயரும் உண்டு (தீபாவளி, சங்கராந்தி,)

(4) பொங்கல் ——— மாதம் வரும். (தை) பங்குனி, ஐப்பசி)

(5) பால் ——— என்று இருக்கும். (பச்சைப் பசேல், வெள்ளைவெளேர், செக்கச் செவேல்)



# 5. போலிப் பூசாரி

1. பனையூர் என்பது ஒரு சிறிய கிராமம். அந்த ஊரில் ஒரு மாரியம்மன் கோயில் இருந்தது. முருகப் பண்டாரம் அந்தக் கோயிலின் பூசாரி.

2. பனையூர் ஜனங்கள் படிப்பு இல்லாதவர்கள். அந்த ஊரில் ஒரு திண்ணைப் பள்ளிக்கூடங் கூட இல்லை. பிறகு, அந்தக் கிராமத்திலும் ஒரு பள்ளிக்கூடம் திறக்கப் பட்டது. அதில் அநேக குழந்தைகள் படித்து வந்தனர்.

3. முருகப் பண்டாரம் ஏழை. கோயில் பூசையில் அவனுக்குக் காணிக்கை அதிகமாகக் கிடைக்கவில்லை. ஆதலால், அவன் கோயிலில் குறி சொல்

லிப் பிழைத்து வந்தான். ஜனங்களுக்கு அவனிடம் நம்பிக்கை அதிகம். குறி கேட்க வரும் ஜனங்களுக்கு, முருகப் பண்டாரம், தானே குறி சொல்லுவதில்லை; கோயிலி லிருந்து அம்மனே பேசுவது போல் ஒரு குரல் பேசும். ஜனங்கள் அதை நம்பிப் பண்டாரத்திற்குப் பணம் கொடுத்து வந் தார்கள்,

4. குப்பனும் சுப்பனும் புதிய பள்ளி யில் படித்துவந்த இரண்டு சிறுவர்கள். பண்டாரம் குறி சொல்லி வந்தது அவர் களுக்கு அதிசயமாக இருந்தது. இருவரும் ஒரு நாள் குறி சொல்லும் நேரத்தில் கோயிலுக்குப் போனார்கள்.

5. கோயிலில் பெரிய கூட்டம் கூடி இருந்தது. பண்டாரம் குறி சொல்லிக் கொண்டிருந்தான். குப்பனும் சுப்பனும், 'இதில் ஏதோ சூது இருக்கிறது' என்று நினைத்தனர். அவர்கள் கோயிலைச் சுற்றிப் பார்த்தார்கள்.

6. கோயிலுக்குப் பின்னால் ஒரு பெரிய ஆலமரம் இருந்தது. அடி மரத்தில் ஓர் ஆள் நுழையும் அளவுக்கு ஒரு துவாரம் காணப்பட்டது. பண்டாரம் குறி சொல்ல ஆரம்பித்ததும், இந்தத் துவாரத்திற்குள்ளி ருந்து பலத்த குரல் ஒன்று வந்துகொண்

டிருந்தது. இருவருக்கும் பண்டாரத்தின் சூது தெரிந்துவிட்டது.

7. குப்பன் இந்த வஞ்சகத்தை வெளிப்படுத்த எண்ணினன்; பசுந் தென்னை ஓலையினல் ஒரு பாம்பு பின்னினன். அதை அந்தப் பொந்துக்குள் போட்டான். பொந்திலிருந்து "ஐயோ! பாம்பு! பாம்பு!" என்று அலறிக்கொண்டே ஒரு பையன் வெளியே ஓடிவந்தான்.

8. முருகப் பண்டாரத்தின் மகன் மரப் பொந்திலிருந்து ஓடுவதை ஜனங்கள் கண்டனர். முருகப் பண்டாரம்பாடு திண்டாட்டமாகிவிட்டது. ஊரார் தாம் ஏமாற்றப் பட்டதை அறிந்து வெட்கப்பட்டார்கள்.

| | | |
|---|---|---|
| கிராமம் | பணம் | பின்னினன் |
| பூசாரி | அதிசயம் | பொந்து |
| படிப்பு | கூட்டம் | அலறிக்கொண்டு |
| திண்ணை | சூது | ஏமாற்றம் |
| காணிக்கை | துவாரம் | வெட்கம் |
| குறி | பலத்த | திண்டாட்டம் |
| ஜனங்கள் | குரல் | சூது |
| நம்பி | வெளிப்படுத்த | வஞ்சகம் |

### கேள்விகள்

1. முருகப் பண்டாரம் ஜனங்களை எப்படி ஏமாற்றி வந்தான்?

2. குப்பனும் சுப்பனும் கோயிலில் கண்டது யாது?

3. பண்டாரம் செய்த சூது யாது?

4. சூது எவ்வாறு வெளிப்பட்டது?

### பயிற்சி

1. எதிர்ச்சொற்களை எழுது: கிராமம். நம்பிக்கை, ஆரம்பம், பெரிய, அதிகம், ஏழை, திண்டாட்டம்.

2. உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது: கூட்டம், ஏமாற்றம், கூக்குரல், காணிக்கை, அதிசயம்.

3. இந்தப் பாடத்தில் வந்துள்ள பெயர்ச் சொற்களை எடுத்து எழுது.

### இலக்கணம்

குப்பன் — ஒருவன் பெயர்
பனையூர் — ஓர் ஊரின் பெயர்
ஆலமரம் — ஒரு மரத்தின் பெயர்
கோயில் — ஓர் இடத்தின் பெயர்
நாள் — காலத்தின் பெயர்
பூனை — ஒரு பிராணியின் பெயர்

இவை யாவும் பொருள், இடம், காலம் முதலியவற்றைக் குறிப்பிடும் சொற்கள். இவைகளுக்குப் பெயர்ச்சொற்கள் என்பது பெயர்.

இப்பாடத்தில் வந்துள்ள பெயர்ச் சொற்களை மேலே உள்ளபடி வகைப்படுத்தி எழுது.




## 6. கோதுமை

1. நெல் நமக்கு முக்கியமான உணவுப் பொருள். நெல்லைக் குத்திஞல் அரிசி கிடைக்கிறது. அரிசியை நாம் சோருகச் சமைத்துச் சாப்பிடுகிரும். நெல் போலவே கோதுமையும் உணவுக்குப் பயன்படுகிறது.

2. மழையும் வெப்பமும் மிதமாக உள்ள இடங்களில் கோதுமை விளையும். கோதுமை வட இந்தியாவில் குளிர் காலத்தில் பயிராகிறது. வெளி நாடுகளிலும் கோதுமை பயிராகிறது. கோதுமையில் அரிசியைக் காட்டிலும் சத்து அதிகம்.

3. கோதுமையிஞல் பல உணவுப் பண்டங்கள் செய்யப்படுகின்றன. கோதுமையை அரைத்து, மாவாக்கி, ரொட்டியும்

பிஸ்கட்டும் செய்கிறார்கள்; பூரியும், சப்பாத்தியும் செய்கிறார்கள். கோதுமையை உடைத்து, நொய்யாக்கி, உப்புமாச் செய்யலாம்.

4. கோதுமைப் பயிருக்குத் தண்ணீர் அதிகமாகத் தேவையில்லை. நெற்பயிருக்குத் தண்ணீர் அதிகமாக வேண்டும். கோதுமைப் பயிரின் வேர் பூமிக்குள் ஆழமாகச் செல்லும்; ஆதலால், கோதுமைப் பயிர் பூமிக்குள் இருக்கும் தண்ணீரை இழுத்துக் கொள்ளும். நெற்பயிரின் வேர் பூமிக்குள் ஆழமாகச் செல்லாது; ஆதலால், அதற்கு அடிக்கடி நாம் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

5. கோதுமையில் இரு வகைகள் உண்டு. மாவு கோதுமை ஒரு வகை; அதை மாவாக மட்டும் அரைக்கலாம். சம்பா கோதுமை என்பது மற்றொரு வகை; அதை மாவாகவும் அரைக்கலாம்; நொய்யாகவும் உடைக்கலாம்.

6. சம்பா கோதுமையைச் சாதமாகச் சமைத்து உண்பதும் உண்டு. கோதுமைப் பண்டங்களுடன் காய்கறியையும் உண்பார்கள். கோதுமை உடலுக்கு உறுதி அளிக்கும். ஆதலால், நாமும் அரிசிச் சாதத்தைக் கொஞ்சம் குறைத்துக்கொண்டு, கோதுமை உணவும் சாப்பிடுவது நல்லது.

| | | |
|---|---|---|
| பயன்படுகிறது | பிஸ்கட்டு | மாவு |
| மிதமாக | பூரி | சம்பா |
| கோதுமை | சப்பாத்தி | மற்ருெரு |
| சத்து | உடைத்து | உடல் |
| பண்டம் | நொய் | உறுதி |
| ரொட்டி | உப்புமா | |

### கேள்விகள்

1. கோதுமை எப்படிப்பட்ட இடங்களில் விளையும் ?

2. கோதுமையிலிருந்து செய்யக்கூடிய உணவுப் பண்டங்கள் யாவை ?

3, கோதுமைப் பயிருக்குத் தண்ணீர் ஏன் அதிகமாகத் தேவையில்லை ?

4. கோதுமையில் உள்ள வகைகள் எத்தனை ? அவை யாவை ?

5. கோதுமை உண்பதால் பயன் யாது ?

### பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் சரியான எழுத்துக்களை அமைத்து எழுது :

கோ—க்குத் தண்—ர் அதிகமாக வேண்—ம்.

கோதுமை உண—க்குப் பயன் படுகிறது.

நெற்ப—ரின் வேர் பூமிக்குள் ஆ—மாகச் செல்லாது.

கோதுமை உட—க்கு உ—தி அளிக்கும்.

2. எதிர்ச்சொற்களை எழுது : மிதம், உண்டு, செல்லாது.

3. கோதுமை, நெல், பயிர், உப்புமா, சப்பாத்தி, பூரி, தண்ணீர், அரிசி—இவை என்ன சொற்கள் ?

## தெரிந்துகொள்

வேளை, வேலை, வாழை, வலை, தழை, பழம், பலம், தாளம்—ழ, ள, ல என்ற எழுத்துக்களின் உச்சரிப்பைத் தெரிந்துகொள்.

## இலக்கணம்

| ஒன்று | பல |
|---|---|
| பயிர் | பயிர்கள் |
| இடம் | இடங்கள் |
| பண்டம் | பண்டங்கள் |
| வேர் | வேர்கள் |

ஒரு பொருளைக் குறிக்கும் சொல் ஒருமை என்றும், பல பொருள்களைக் குறிப்பது பன்மை என்றும் சொல்லப்படும்.



# 7. மயில்

1. மயில் அழகான பறவை. மயில் காட்டில் வாழும். வீடுகளிலும் மயிலை வளர்ப்பது உண்டு. வெப்பமான பிரதேசங்களில் மயில் காணப்படும்.

2. மயிலின் தலையும் கண்களும் சிறியவை. அதன் கழுத்தும் சிறகுகளும் நீளமானவை. அதன் சிறகுகளுக்குத் தோகை என்று பெயர். அதன் தோகையில் அநேக நிறங்களைக் காணலாம். பச்சை, மஞ்சள், நீலம், ஊதா என்ற பல நிறங்கள் வட்டம் வட்டமாக மயில் தோகையை அழகு செய்கின்றன.

3. ஆண் மயிலுக்கு மட்டுமே தோகை உண்டு; பெண் மயிலுக்குத் தோகை

இல்லை. மேகத்தைக் கண்டால் ஆண் மயில் தனது தோகையை விரித்து ஆடும். மயில் ஆடுவது நேர்த்தியாக இருக்கும். பெண் மயில் ஆண் மயிலைப் போல் ஆடாது. ஆண் மயிலுக்குக் கொண்டையும் உண்டு.

4. மயிலின் இறக்கைகள் சிறியவை; ஆதலால், அது உயரமாகப் பறக்காது. அது பெரும்பாலும் தரையிலேயே நடமாடும். மயிலை மரக்கிளைகளிலும் பெரிய கட்டடங்களின் மீதும் காணலாம்.

5. மயில் தானியங்களையும் புழுப் பூச்சிகளையும் தின்னும். மயில் தன் அலகினால் பாம்பைக் குத்திக் கொன்றுவிடும். மயில் முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்கும். மயில் கூவுவதை "அகவுதல்" என்று சொல்லுகிறோம். மயில் அழகாக இருந்தாலும், அதன் குரலில் இனிமை கிடையாது.

6. மயிலின் சிறகு மருந்துக்கு உதவும். மயில் சிறகினால் விசிறி கட்டுவார்கள். மயில் கோழி இனத்தைச் சேர்ந்தது. மயில் முருகக் கடவுளுடைய வாகனம். மயிலைக் கண்ட மனம் மகிழும்.

| | | |
|---|---|---|
| பிரதேசம் | ஊதா | நேர்த்தி |
| பெரும்பாலும் | கட்டடம் | புழுப்பூச்சிகள் |
| அகவுதல் | இனம் | கடவுள் |
| தோகை | வட்டம் வட்டமாக | இறக்கை |
| நடமாடும் | மீது | அலகு |
| இனிமை | மகிழும் | வாகனம் |

## கேள்விகள்

1. மயில் எப்படிப்பட்ட பிரதேசங்களில் இருக்கும்?
2. தோகை என்பது யாது? அது எப்படி இருக்கும்?
3. பெண் மயிலுக்கும் ஆண் மயிலுக்கும் வித்தியாசம் என்ன?
4. மயிலின் ஆகாரம் என்ன?
5. மயில் கூவுவதை என்னவென்று சொல்கிறோம்?
6. மயில் இறகினால் என்ன உபயோகம்?

## பயிற்சி

1. கோழியைப் பற்றி நான்கு வாக்கியங்கள் எழுது.
2. கீழ்க்காணும் ஒவ்வொரு சொல்லுக்கும் அதே பொருள் உள்ள வேறு சொல்லை எழுது:

அழகான, நிறம், போல, பெரும்பாலும், இனம், நடமாடும்,

3. ஒருமைக்குப் பன்மையும் பன்மைக்கு ஒருமையும் எழுது;

வட்டம், மயில்கள், நிறங்கள், மேகம், கட்டடம், தானியங்கள்.

4. கீழுள்ள எழுத்துக்களைப் பொருத்தமாக மாற்றிச் சொற்களாக அமைக்க:

ரபிசதேம், டட்டகம், டள்கவு, னிதாம்ய, றுகஆமுன்.

5. மௌனமாக வாசித்துச் சரியா, தவறு என்று சொல்லு :

(1) மயில் கூவுகிறது.
(2) மயில் சிறகு மருந்துக்கு உதவும்.
(3) மயில் உயரமாகப் பறக்கும்.
(4) பெண் மயிலுக்குக் கொண்டை உண்டு.
(5) மயிலின் குரல் இனிமையானது.
(6) மயில் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும்.

## இலக்கணம்

ஒரு பொருளின் பெயரைக் குறிப்பது பெயர்ச்சொல் அன்றோ? மயில் அகவுகிறது, கோழி கூவுகிறது, குயில் பாடுகிறது என்ற வாக்கியங்களைக் கவனி. மயில் என்ன செய்கிறது? அகவுகிறது. அகவுகிறது என்ற சொல், மயில் செய்யும் வேலையைக் குறிக்கிறது. ஆதலால், வேலை அல்லது வினையைக் குறிக்கும் இந்தச் சொல் வினைச்சொல் எனப்படும். இதுபோலவே கூவுகிறது. பாடுகிறது என்ற சொற்களும் வினைச்சொற்கள்.

இந்தப் பாடத்தில் ஐந்தாம் பாராவில் உள்ள வினைச் சொற்களை எடுத்து எழுது.




## 8. மயில் பாட்டு

1. வானத்தைப் பாரடியோ—மயிலே!
மாமழை மேகமெல்லாம்
கான முரசடிக்க—மின்னல்
கண்வீசி ஆடுதடீ!
மோன வியப்புடனே—புவி உளம்
முற்றும் குளிருதடீ!
ஆனந்தத் தோகைவிரி—மயிலே
ஆடிக் களித்திடுவோம்!

2. சிந்தாமணி யடியோ—உனக்குச்
செங்கதிர் வட்டம் எல்லாம்;
சந்தமுடன் அருவி—உனக்கே
தாளம் இசைக்குதடீ!
இந்த உலகை வளர்—வான்மழை
இடி முழவு அடிக்குதடீ!
தந்தமித் தோம் எனவே—மயிலே
தாண்டவம் செய்திடுவோம்!

—யோகி சுத்தானந்த பாரதி

| | | |
|---|---|---|
| மாமழை | முழவு | செங்கதிர் |
| முற்றும் | மோனவியப்பு | எனவே |
| இசைக்குது | சிந்தாமணி | உளம் |
| கானமுரசு | தாண்டவம் | சந்தம் |
| ஆனந்தம் | புவி | களித்திடு |

**கேள்விகள்**

1. மயில் எப்பொழுது தன் தோகையை விரித்து ஆடும்?
2. மயிலின் ஆட்டத்திற்குத் தாளம் போடுவது எது?

**பயிற்சி**

1. வானம், மழை, மேகம், பார், ஆடு, தோகை, அருவி, இசைக்கிறது—இவற்றுள் ஒவ்வொன்றும் என்ன சொல்?

**2. பொருத்தமான சொற்களைச் சேர்த்துப் படி:**

| | |
|---|---|
| காகம் | பேசுகிறது |
| குருவி | பாடுகிறது |
| மயில் | கூவுகிறது |
| கோழி | அகவுகிறது |
| கிளி | கரைகிறது |
| குயில் | கீச்சிடுகிறது |



# 9. மாலை வேளை

1. தினந்தோறும் நாம் வேலை செய்கி றோம். அதனால் நமக்குக் களைப்பு உண்டா கிறது. களைப்பைப் போக்க நாம் அடிக்கடி ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும். களைப் படைந்த உறுப்புகளுக்கு உற்சாகம் ஊட்ட வேண்டும். ஓய்வு நேரங்களில் விளையாடு வதால் உற்சாகம் உண்டாகும்; உடலும் ஆரோக்கியமாக இருக்கும்.

2. நீங்கள் மாலை வேளையில் பல விளை யாட்டுகள் விளையாடுகிறீர்கள். பந்து ஆடு தல், ஓடுதல், குதித்தல், தாண்டுதல், சடுகுடு, கிளித்தட்டு முதலியவை சில விளையாட்டு

கள். ஓடியாடி வியர்க்க வியர்க்க விளையாடுவதால் உடலில் இரத்த ஓட்டம் அதிகமாகும். இரத்தம் சுத்தம் அடையும், உடல் வலிமை உறும்; மனம் உற்சாகம் பெறும்.

3. கீழே தரும் விளையாட்டை விளையாடிப் பாருங்கள். தரையில் ஒரு பெரிய வட்டம் போடவும், சற்றுத் தொலைவில் ஒரு நேர்க் கோடு போட்டுக் கொள்ளவும். விளையாடுகிறவர்கள் அந்தக் கோட்டின்மேல் வரிசையாக நிற்கவேண்டும். உங்களில் ஒருவனைத் தலைவனாக ஏற்றுக் கொள்ளுங்கள். அவன் ஊதலை ஊதினதும், எல்லாரும் வட்டத்தைத் தொட வேண்டும். எவன் கடைசியில் வருகிறானோ, அவன் வட்டத்திற்குள் தனியாக நிற்க வேண்டும். மற்றவர்கள் வட்டத்திற்கு வெளியே இருக்கவேண்டும்.

4 வெளியில் இருப்பவர்கள் வட்டத்திற்குள் ஓடவேண்டும். வட்டத்திற்குள் இருப்பவன் அவர்களைப் பிடிக்க முயல வேண்டும்; அவன் வெளியில் வந்து ஒருவரையும் பிடிக்கக்கூடாது. ஆனால், வெளியில் இருப்பவர்கள் உள்ளேயும் வெளியேயும் ஓடி ஆடலாம். உள்ளே இருப்பவன் கையில் அகப்படாமல் அவர்கள் தப்பித்துக்கொள்ள முயலவேண்டும். உள்ளே இருப்பவன் வெளியில் இருப்பவர்களில் ஒருவனை வட்டத்திற்குள் தொட்டு விட்டால், தொடப்பட்

டவன் வட்டத்திற்குள் நின்று மற்றவர்களைப் பிடிக்கவேண்டும்.

5. இம்மாதிரியே தொடர்ந்து விளையாடவேண்டும். எங்கே, ஆடிப்பாருங்கள்!

| | | |
|---|---|---|
| தினந்தோறும் | அதிகரிக்கும் | கடைசி |
| களைப்பு | வலிமை | தனியாக |
| ஓய்வு | பெறும் | முயல |
| உற்சாகம் | தொலைவில் | தப்பித்துக்கொள்ள |
| ஊட்டவேண்டும் | நேர்க்கோடு | தொடர்ந்து |
| ஆரோக்கியம் | நோக்கி | உறும் |
| வியர்க்க வியர்க்க | | |

கேள்விகள்

1. நாம் ஏன் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும்?

2. நீங்கள் மாலை நேரத்தில் விளையாடும் விளையாட்டுகள் யாவை?

3. ஓடியாடி விளையாடுவதால் என்ன பயன்?

பயிற்சி

1. உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது:
தினந்தோறும், களைப்பு, ஓய்வு, ஆரோக்கியம் வலிமை.

2. எதிர்ச்சொற்களை எழுது:

வேலை, கூடாது, தொலைவு.

3. நீங்கள் விளையாடும் நான்கு விளையாட்டுகளின் பெயர்களை எழுது.

தெரிந்து கொள்

மனம், மணம், அணு, பனை, வண்டி, கன்று, நுங்கு— இவற்றில் ன, ண, ந, என்ற எழுத்துக்களின் வித்தியாசங்களை அறிந்துகொள்.

## இலக்கணம்

கோபு மாலையில் விளையாடுகிருன்—இது ஒரு வாக்கியம். இதில் மூன்று சொற்கள் இருக்கின்றன. ஒவ்வொரு சொல்லும் சில எழுத்துக்களால் ஆனது. எழுத்துக்கள் நான்கு வகைப்படும்: அவை (1) உயிரெழுத்துக்கள்—அ. ஆ. இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்ற பன்னிரண்டு. (2) மெய்யெழுத்துக்கள்: க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் எனப் பதினெட்டு. (3) ஃ என்பது ஆய்த எழுத்து. (4) உயிர்மெய் எழுத்துக்கள்: க முதல் னௌ வரை 216. இவை புத்தகத்தின் கடைசியில் உள்ளன: ஆக மொத்தம் தமிழ் எழுத்துக்கள் 247.

# 10. நீதிமொழிகள்

1. காலையில் எழுந்து கடவுளைத் தொழு.
2. கூழானாலும் குளித்துக் குடி.
3. கந்தையானாலும் கசக்கிக் கட்டு.
4. சுத்தம் சோறு போடும்.
5. ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்.
6. தாய் சொல் மிக்க வாசகமில்லை.
7. தந்தை சொல் மிக்க மந்திரமில்லை.
8. தந்தை தாய்ப் பேண்.

| | | |
|---|---|---|
| தொழு | கந்தை | வாசகம் |
| கூழ் | ஓது | மந்திரம் |
| பேண் | | |

**கேள்விகள்**

1. சுத்தம் எப்படிச் சோறு போடும் ?

2. தாய் சொல் மிக்க வாசகமில்லை—இதை விளக்க ஒரு கதை சொல்.

3. உனக்குத் தெரிந்த வேறு பழமொழிகளில் மூன்று எழுதுக




# 11. குழந்தை காந்தி

1. உலகில் உள்ள மலைகளில் உயரத்தால் பெரியது **இமயமலை.** அது போலவே, உலகில் தோன்றிய மனிதர்களுள் அறிவாலும் ஒழுக்கத்தாலும் பெரியவர் **மகாத்மா காந்தி.** மகாத்மா காந்தியின் புகழ் உலகெங்கும் பரவியிருக்கிறது.

2. நமது பாரத நாட்டில் **கூர்ஜரம்** என்றொரு பகுதி உள்ளது. காந்தி மகாத்மா அங்கேதான் பிறந்தார். அவர் 1869 ஆம் வருஷம், அக்டோபர் மாதம், இரண்டாம் தேதி பிறந்தார். அவருடைய முழுப் பெயர் **மோகனதாஸ் கரம் சந்திர காந்தி** என்பது.

3. காந்தியின் தாயார் கடவுள் பக்தி மிகுந்தவர். அவருடைய தகப்பனார் ஒரு

சிற்றரசருக்கு மந்திரியாக இருந்தார். சிறு வயதில் காந்தி ஒரு சிறிய பள்ளிக்கூடத்தில் படித்தார். அக்காலத்தில் அவர் மற்றப் பிள்ளைகளுடன் விளையாடுவது இல்லை.

4. ஒரு நாள் அந்தப் பள்ளிக்கூடத்திற்கு ஒரு பரீட்சை அதிகாரி வந்தார். காந்தி அப்பொழுது ஆரும் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார். அதிகாரி அந்த வகுப்புக்குச் சென்ருர். அவர் சில வார்த்தைகளைச் சொல்லி மாணவர்களை எழுதச் சொன்னர். காந்தி ஒரு வார்த்தையைத் தப்பிதமாக எழுதினர். அதை உபாத்தியாயர் பார்த்தார். காந்தியின் பக்கத்தில் இருந்த பையன் சரியாக எழுதி இருந்தான். உபாத்தியாயர் தமது காலால் காந்தியின் காலை அழுத்தினர்; பக்கத்துப் பையன் எழுதியதைப் பார்த்து எழுதும்படி சைகை செய்தார். ஆனல், காந்தி அவ்வாறு செய்யவில்லை. அவருக்கு 'காப்பி' அடிக்கவே தெரியாது.

5. காந்திக்குப் பள்ளிக்கூடத்தில் ஒரு நண்பன் ஏற்பட்டான். அவன் 'புகை' பிடிப்பான் ; மாமிசம் சாப்பிடுவான் ; பொய் சொல்லுவான் ; திருடுவான். மாமிசம் சாப்பிடுமாறு அவன் காந்திக்கு அடிக்கடி சொல்லி வந்தான். அவன் பேச்சில் அவர் மயங்கினர். ஒரு நாள் அவன் அளித்த மாமிச உணவை அவர் புசித்தார்.

6. மாமிசம் உண்ணுதல் காந்திக்குப் பழக்கம் இல்லை, அவர் பெற்ருேரும் அதை உண்பதில்லை. தமது தவற்றை உணர்ந்ததும், அதை அவர் விட்டு விட்டார். தோழன் அவருக்குப் புகை பிடிக்கக் கற்பித்தான். அதற்குச் சுருட்டு வாங்க அவர் வீட்டில் பணம் திருடலானுர்; வேலைக்காரனிடமிருந்துகூடப் பணம் திருடினுர். ஆனுல், சீக்கிரமாகவே தமது தவற்றை அறிந்தார். தாம் செய்த குற்றங்களை ஒரு கடிதத்தில் விவரமாக எழுதினுர்; அதைத் தந்தையிடம் கொடுத்தார். தந்தை அப்பொழுது நோயினுல் படுக்கையில் படுத்திருந்தார்.

7. தந்தை கடிதத்தைப் படித்தார்; காந்தியும் அருகில் இருந்தார். தந்தை கோபம் கொள்ளவில்லை. அவர் கண்களிலிருந்து கண்ணீர் பெருகிற்று. அவர் ஒரு வார்த்தையும் பேசவில்லை. அது முதல் காந்தி கெட்ட பழக்கங்களை விட்டுவிட்டார்.

8. சிறு வயதிலிருந்தே காந்தி எப்பொழுதும் உண்மையே பேசி வந்தார்; அதன் பயனுக உலகோர் போற்றும் மகான் ஆனுர். அவரைப் பின்பற்றி நாம் எல்லோரும் நடக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| உலகம் | கண்ணீர் | புசித்தார் |
| மிகுந்தவர் | பின்பற்றி | தோழன் |
| சைகை | பரவி | விவரமாக |
| திருடு | மந்திரி | உண்மை |
| பெற்ருேர் | சிறுவயது | அதிகாரி |
| சுருட்டு | ஏற்பட்டான் | பக்தி |
| ரோய் | அளித்த | சரியாக |
| மகான் | உணர்ந்ததும் | பொய் |
| புகழ் | குற்றம் | பழக்கம் |
| சிற்றரசர் | பெருகிற்று | கற்பித்தான் |
| நண்பன் | பயனுக | தந்தை |
| மயங்கினுர் | மகாத்மா | போற்றும் |
| தவறு | தப்பிதமாக | பரீட்சை |
| சீக்கிரம் | புகை | |

# 12. காந்தியின் பேச்சு




காந்தியின் பேச்சே
கல்கண்டு ;
கருணை இருந்தால்
களிப்புண்டு ;
கட்டின வேட்டி
முழத்துண்டு ;
காசினி எல்லாம்
மதிப்புண்டு.
கையில் மூங்கில்
கம்புண்டு;
பொய்யை விரட்டும்
தெம்புண்டு ;
பொக்கை வாயில்
சிரிப்புண்டு ;
பூமிக்கு அதுவே
களிப்புண்டு.
சாந்தம், அன்பு
சாத்தியமும்
காந்தி தாத்தா
சொன்னவழி ;
சமத்தாய் இந்தப்
பாதையிலே
தனியாய் நாமே
நடந்தாலும்

துணையாய் இருக்கக் காந்தி மகான்
தோன்றி வருவார் நம் எதிரே.
பொய்யைச் சொல்ல மாட்டோம் நாம்;

பொல்லாக் கோபம் கொள்ளோம் நாம்;
மெய்யைச் சொல்லி உலகத்திலே
மேலாய் என்றும் வாழ்வோமே!

—கொத்தமங்கலம் சுப்பு.

| | | |
|---|---|---|
| கல்கண்டு | மேலாய் | மதிப்பு |
| தெம்பு | முழம் | பாதை |
| கொள்ளோம் | சத்தியம் | கம்பு |
| கருணை | காசினி | துணை |
| பொக்கை | சமத்தாய் | |

## கேள்விகள்

1. காந்தி பிறந்த தேதி யாது?

2. காந்தியின் முழுப் பெயர் யாது?

3. காந்தி பிழை செய்ததை உபாத்தியாயர் எப்படி அறிவித்தார்?

4. காந்தி ஏன் உபாத்தியாயர் சொன்னபடி செய்யவில்லை?

5. காந்தி நண்பனிடமிருந்து கற்ற கெட்ட பழக்கங்கள் யாவை?

6. காந்தி கெட்ட பழக்கங்களை எதுமுதல் விட்டுவிட்டார்?

7. காந்தி சொன்ன வழி என்ன?

8. உலகில் நாம் மேன்மையாக எப்பொழுது வாழ முடியும்?

## பயிற்சி

1. எதிர்ச்சொற்களை எழுது :

உயர்ந்தவர், பிறந்தார், நண்பன், உண்மை.

2. உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது : உண்மை, நண்பன், சத்தியம், குற்றம், பெற்றோர், பரீட்சை.

3. உலகில் உள்ள மலைகளில் உயரத்தால் பெரியது இமயமலை — இவ்வாக்கியத்தில் உள்ள எழுத்துக்களைக் கீழுள்ள அட்டவணையில் வகைப்படுத்தி எழுது :

| உயிர் எழுத்து | மெய் எழுத்து | உயிர் மெய் எழுத்து |
| --- | --- | --- |
| | | |

# 13. பென்சில் சொன்ன கதை

1. உங்களுள் ஒவ்வொருவர் கையிலும் நான் இருக்கிறேன். உங்கள் பெற்ருேருக்கும் நான் பயன் படுகிறேன். என்னை நீங்கள் கடையில் வாங்குகிறீர்கள். என் உருவம் ஒரே மாதிரி இருப்பதில்லை. எனக்குப் பல உருவங்கள் உண்டு; நிறங்கள் உண்டு. நான் அழகாகவும் இருக்கிறேன். நான் எப்படி வந்தேன் தெரியுமா? சொல்லுகிறேன், கேளுங்கள் :

2. நான் ஒரே நாட்டைச் சேர்ந்தவன் அல்லன். அமெரிக்கா என்ருெரு நாடு உள்ளது. அங்கே கிராபைட் என்ற பொருள் கிடைக்கிறது. இலங்கையிலும் அது கிடைக்கிறது. ஆப்பிரிக்காவிலும் அமெரிக்காவிலும் வழுவழுப்பான ஒருவகை மரம் உள்ளது. நமது நாட்டிலுள்ள கோதாவரி நதிக்கரையில் களிமண் கிடைக்கிறது. இவற்றைத் தொழிற் சாலையில் சேகரம் செய்து என்னைத் தயாரிக்கிருர்கள்.

3. ஆப்பிரிக்காவில் அடர்ந்த காடுகளில் ஒருவகை மரம் இருக்கிறது. அதை வெட்டித் துண்டுகளாகச் செய்கிருர்கள். அத்துண்டுகள் வழுவழுப்பாக இருக்கும். அங்கிருந்து அவை நமது நாட்டுக்கு வருகின்றன. முதலில் கிராபைட் என்ற பொரு

ளைப் பொடி செய்வார்கள், இந்தப் பொடியையும் களிமண்ணையும் கலந்து பசையாகும்படி நன்ருக அரைப்பார்கள். அந்தப் பசையை ஓர் அச்சில் வைத்து மெல்லிய கம்பிகளாக இழுப்பார்கள். இவ்வாறு நான் பிறந்தேன். என்னைப் போல் பலர் பிறந்தனர்.

4. எங்களில் சிலர் மிருதுவாக இருப்பார்கள்; சிலர் கடினமாக இருப்பார்கள். எங்கள் இருவகையாரையும் பிரித்துப் பெட்டிகளில் அடுக்குவார்கள்.

5. எங்களுக்கு உடை வேண்டும் அல்லவா? அதற்கு மரச் சட்டங்கள் பயன்படுகின்றன, சட்டங்களின் நடுவில் ஒரு நீண்ட பள்ளம் உண்டாகும்படி அவற்றை இழைப்பார்கள். வஜ்ஜிரத்தினுல் பசை செய்து சட்டங்களின் நடுவில் தடவுவார்கள், பள்ளங்களில் எங்களை வைத்துப் பொருத்துவார்கள்.

6. அதனுடன் நிற்பதில்லை. இயந்திரங்களில் எங்களைக் கொடுத்து உருண்டையாகவும் தட்டையாகவும் வெட்டிவிடுவார்கள். எங்களுடைய அளவும் ஒன்ருகவே இருக்குமாறு ஓர் இயந்திரம் எங்களை வெட்டிவிடுகிறது.

7. எங்களுக்கு அழகு வேண்டாமா? ஆதலால் எங்களுக்குப் பச்சை, சிவப்பு,

மஞ்சள், நீலம் ஆகிய வர்ணங்களை இயந்திரத்தின் உதவியால் பூசுகிறார்கள். பின்பு எங்கள் பேரில் பொன் எழுத்துக்களில் அச்சு அடிக்கிறார்கள்.

எங்களைப் பன்னிரண்டு பன்னிரண்டாகச் சேர்த்துக் கட்டி, பெட்டிகளில் அடுக்கி வைக்கிறார்கள். கடைக்காரர்கள் எங்களை வாங்கி விற்கிறார்கள். அங்கிருந்து நீங்கள் எங்களை வாங்குகிறீர்கள். அவர்களில் நானும் ஒருவன். நான் உங்களுக்குப் பலவிதங்களில் பயன்படுகிறேன். என் விலையும் குறைவு. நானும் என் போன்றவரும் தொழிற்சாலைகளில் பிறக்கிறோம். நமது நாட்டிலும் எங்களைப் பிறப்பிக்கும் தொழிற்சாலைகள் இருக்கின்றன.

| | | |
|---|---|---|
| மாதிரி | அளவு | மிருது |
| பசை | தொழிற்சாலை | சட்டம் |
| பள்ளம் | களிமண் | அடுக்கி |
| இயந்திரம் | கம்பி | தயாரிக்கிறார்கள் |
| போன்றவர் | வஜ்ஜிரம் | கடினம் |
| வழுவழுப்பான | வர்ணம் | உருண்டை |
| அச்சு | சேகரம் | விற்கிறார்கள் |

### கேள்விகள்

1. 'கிராபைட்' எங்கே கிடைக்கிறது ?
2. பென்சிலுக்கு மரம் எங்கிருந்து வருகிறது ?
3. பென்சில் கம்பிகள் எவ்வாறு செய்யப்படுகின்றன ?
4. கம்பிகளைச் சட்டங்களில் பொருத்துவது எப்படி?
5. பென்சிலை எவ்வாறு அழகுபெறச் செய்கிறார்கள்?

1, எதிர்ச்சொற்களை எழுது :

மிருது, பள்ளம், உருண்டை, பிரித்து, மெல்லிய.

2, வழுவழுப்பான, பசை, இயந்திரம், வர்ணம், தொழிற்சாலை—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது,

3. மயில் தன்னுடைய கதையைச் சொல்வதுபோல் ஐந்து வாக்கியங்கள் எழுது.

4, கீழுள்ளவற்றில் அந்த இனத்தைச் சேராத வார்த்தையை மட்டும் எடுத்து எழுது :

பென்சில், பேனு, பலப்பம், குச்சி, சாக்கட்டி, காகிதம், பலகை, கரும்பலகை, கண்ணுடி.
கோதுமை, நெல், சோளம், கருணைக்கிழங்கு, கம்பு.
மாம்பழம், பலாப்பழம், கத்தரிக்காய், வாழைப் பழம்.

## இலக்கணம்

நமது நாட்டில் கோதாவரி நதிக்கரையில் களிமண் கிடைக்கிறது. இது ஒரு வாக்கியம். இதில் உள்ள சொற்களை இடம் மாற்றி எழுதிப் படி. கிடைக்கிறது நதிக்கரையில் கோதாவரி நாட்டில் நமது. இதன் கருத்து விளங்குகிறதா ? இல்லை. ஆதலால், ஒரு வாக்கியத்தில் உள்ள சொற்கள் கருத்து விளங்கும் வரிசையில் இருக்கவேண்டும். பின்வரும் சொற்றொடர்களை வாக்கியங்களாக அமைக்கவும்:

1. வெட்டிவிடுகிறது அளவாக ஒரே இயந்திரம்.
2. அச்சு பொன் எழுத்துக்களில் அடிக்கிருர்கள்.
3. பசையை அச்சில் மெல்லிய கம்பிகளாக வைத்து இருப்பார்கள்.

———



# 14. கடிதம் எழுதுதல்

1. நமக்குப் பல நண்பர்கள் பல ஊர் களில் இருக்கிறார்கள். உறவினர்களும் வெவ்வேறு ஊர்களில் இருக்கிறார்கள். இவர் களுக்குத் தெரிவிக்க வேண்டிய சமாசாரங் கள் இருந்தால், எப்படி நாம் எல்லோரை யும் நேரில் போய்ப் பார்த்துவர முடியும்? சுமார் நூறு வருஷத்திற்கு முன்வரை, நம் பெரியோர்கள் ஆட்கள் மூலமாகவும், தாமே நேரில் குதிரை மீது சென்றும் சினேகிதர் களுக்கும் உறவினர்களுக்கும் செய்தி சொல்வார்கள்.

2. இப்பொழுது நாம் அவ்வாறு கஷ் டப் படவேண்டியதில்லை. மிகக் குறைந்த

செலவில் விரைவாகச் செய்திகளை அனுப்பலாம். ஒவ்வோர் ஊரிலும் தபால் ஆபீசு இருக்கிறது. அங்கே கார்டும் கவரும் விற்கப்படுகின்றன. அவற்றை நாம் பணம் கொடுத்து வாங்கலாம். கார்டில் எழுத்துக்கள் இல்லாத பக்கத்தில், செய்திகளை எழுதவேண்டும்; மறுபுறத்தில் நாம் யாருக்கு எழுதுகிறோமோ அவருடைய மேல் விலா




சம் எழுத வேண்டும். கவர் எழுத வேண்டுமானால், தனித்தாள் ஒன்றில் செய்திகளை எழுதி, அதைக் கவருக்குள் போட்டு, ஒட்டி, வெளிப்புறம் தபால் தலை உள்ள பக்கத்தில் நாம் யாருக்கு எழுதுகிறோமோ அவருடைய மேல் விலாசம் எழுதவேண்டும். எழுதிய கடிதங்களைத் தபால் பெட்டியில் போட்டால், நாம் யாருக்கு எழுதுகிறோமோ அவர்களிடம் அவை சேரும்.

3. ஒரு கார்டின் விலை முக்காலணா; ஒரு கவரின் விலை இரண்டணா. செய்திகள் குறைவாக இருந்தால் கார்டில் எழுதலாம்; அதிகமாக இருந்தால் கவரில் அனுப்பலாம். கடிதம் எழுதுவது எப்படி?

4. கார்டின் ஒரு புறத்தில் யாருக்கு எழுதுகிறோமோ அவருடைய முழு விலாசத்தை எழுதவேண்டும். மறுபக்கத்தில் செய்திகளை எழுதவேண்டும். கவரில் எழுதினால், உறையின் மேல் புறத்தில் விலாசம் எழுதவேண்டும்; கீழே ஒரு மாதிரிக் கடிதம் எழுதப்பட்டுள்ளது. அதுபோல் கடிதம் எழுதப் பழகிக்கொள்ளவும்.

24, தேரடித்தெரு,
சிதம்பரம்.
28-2-53.

அன்புள்ள அப்பாவுக்கு வணக்கம். இங்கே நான் நலமாக இருக்கிறேன். அங்கே கோபு, சரோஜா, அம்மா அவர்களுடைய நலனை அறிய ஆவலாயிருக்கிறேன்.

மாமா ஊரில் இல்லை. மாமியும் பத்மாவும் நானும் இருக்கிறோம். இன்னும் மூன்று நாட்களில் மாமா வருவார். எனக்கு அடுத்த மாதம் பரீட்சை. நான் நன்றாக படித்துக்கொண்டிருக்கிறேன். கோடை விடுமுறையில் ஊருக்கு வருவேன். எப்பொழுதும் கோபுவையும் சரோஜாவையும் நினைத்துக்கொண்டே இருக்கிறேன். நான் வரும்

பொழுது அவர்களுக்குப் படப் புத்தகங்கள் கொண்டு வருகிறேன்.

எல்லாருக்கும் என் அன்பு.

பிரியமுள்ள,

ப. மணி.

### மேல் விலாசம்

அனுப்புதல்
ப. மணி
24, தேரடித் தெரு,
சிதம்பரம்

திரு. பத்மநாபன் அவர்கள்,
124, அரண்மனைத் தெரு,
தஞ்சாவூர்.

| | | |
|---|---|---|
| உறவினர் | ஆபீசு | விலாசம் |
| செய்தி | அட்டை | பழக்கி |
| ஆட்கள் | உறை | வணக்கம் |
| விரைவில் | கார்டு | ஆவல் |
| தபால் | புறம் | அன்பு |

### கேள்விகள்

1. நம்முடைய முன்னோர் செய்திகளை எவ்வாறு அனுப்பி வந்தனர் ?

2. இப்பொழுது செய்திகளை எப்படி அனுப்புகிறோம்.

3. கார்டு, கவர் இவற்றின் விலை என்ன ?

4. கடிதம் எழுதுவது எப்படி ?

### பயிற்சி

1. வெளியூரில் இருக்கும் உன் அண்ணனுக்கு ஒரு கடிதம் எழுது.

2. உன் அக்காள் கலியாணத்திற்கு ஐந்து நாட்கள் விடுமுறை வேண்டும் என்று உன் உபாத்தியாயருக்கு ஒரு கடிதம் எழுது.

முன்னோர், வெவ்வேறு, செய்தி, விலாசம், தபால்—இச்சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

4. நண்பன், இப்பொழுது, மூடு, மேல்புறம், அரண்மனை — இவைகளுக்கு எதிர்ச்சொற்களை எழுது.

5. கீழ்க்கண்டவை கடிதத்தில் எங்கெந்த இடங்களில் அமையவேண்டும்?—என் பிரியமுள்ள அண்ணனுக்கு; சென்னை; 8-9-50; அன்புள்ள வையாபுரி.

6. கீழே உள்ள விலாசத்தைச் சரியாக அமைத்து எழுதவும்:

78 திருவல்லிக்கேணி ரங்கசாமி தெரு
சென்னை திரு ராமநாதன்

## இலக்கணம்

கீழே காணும் வாக்கியங்களிலுள்ள பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையும் எடுத்து எழுதுக:

1. மாமா எனக்கு ஒரு கடிதம் எழுதினார்.
2. கந்தன் எழுதிய கடிதம் நேற்றுக் கிடைத்தது.
3. தபால்காரன் கடிதம் கொடுத்தான்.

148405



## 15. பனி நிலச் சிறுவர்

1. நம் நாட்டிற்கும் வடக்கே பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால், பரந்த பனிப் பிரதேசம் இருக்கிறது. அங்கு எப்பொழுதும் பூமி பனியால் உறைந்து கிடக்கும். இந்தப் பனி நிலத்தில் ஒரு பகுதிக்குக் கிரீன்லாந்து என்று பெயர்.

2, கிரீன்லாந்தில் வசிப்பவர்களை எஸ்கிமோ ஜாதியர் என்கிறோம். அவர்கள் மஞ்சள் நிறமாகவும் குள்ளமாகவும் இருப்பார்கள்.

3. அங்கு ஆறுமாதம் பனி சற்று உருகி வேனிற்காலம் போலத் தோன்றும். மற்ற ஆறு மாதங்களும் பனி உறைந்து குளிர் தாங்க முடியாமல் இருக்கும்.

4. குளிர் காலத்தில் எஸ்கிமோக்கள் பனிக்கட்டிகளால் வீடு கட்டிக் கொள்வார்கள். வீடு ஒரு கிண்ணத்தைக் கவிழ்த்து வைத்தது போல் இருக்கும், அதன் வாயில் சிறியதாக இருக்கும். அதன் வழியாக ஊர்ந்து தான் உள்ளே செல்லவேண்டும். வீட்டினுள்ளே ஒரு விளக்கு எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும்.

5. கோடை காலத்தில் எஸ்கிமோக்கள் தோலால் ஆன கூடாரத்தில் வசிப்பார்கள். அவர்கள் வாழும் பிரதேசத்தில் பயிர்கள் விளைய



மாட்டா. சீல் என்ற ஒரு வகைக்கடற் பிராணி அங்கே உண்டு, அதையும் அங்குள்ள வேறு சில பிராணிகளையும், எஸ்கிமோக்கள் வேடடையாடி, அவற்றின் மாமிசத்தை உண்பார்கள்; சீலின் தோலினால் உடை செய்துகொள்வார்கள்.



6. எஸ்கிமோக்களின் வண்டிக்குச் சக்கரங்கள் இல்லை. அதற்கு ஸ்லெட்ஜ் என்று

பெயர். சடை நாய்களும். ரெயின்டீர் என்னும் மான்களுமே இந்த ஸ்லெட்ஜ்களை அந்தப் பனித்தரையின் மேல் இலேசாக இழுத்துச் செல்லும்.

7. எஸ்கிமோச் சிறுவனுக்கு எழுதப் படிக்கத் தெரியாது; அங்கே பள்ளிக்கூடங்களும் இல்லை. ஆண்கள் வேட்டையாடுவார்கள். பெண்கள் சீல், ரெயின்டீர் முதலியவற்றின் தோலால் உடை தைப்பார்கள்

| | | |
|---|---|---|
| பனிக்கட்டி | ஊர்ந்து | படகு |
| ஜாதி | எரிந்து | பிராணி |
| குள்ளம் | கூடாரம் | சண்டை |
| தோல் | வேனிற்காலம் | உறைந்து |
| கவிழ்த்து | ஆகாரம் | பகுதி |

**கேள்விகள்**

1. பனி நிலத்தில் வசிப்பவர் யார்?
2. அவர்களுடைய உடை எதனால் செய்யப்பட்டது?
3. குளிர்காலத்தில் அவர்களுடைய வீடு எது?
4. எஸ்கிமோக்களின் ஆகாரம் என்ன?
5. அவர்களுடைய வண்டிகள் எப்படி இருக்கும்?
6. எஸ்கிமோ ஆண்களும் பெண்களும் செய்யும் வேலைகள் யாவை?

**பயிற்சி**

1. கீழே காணும் சொற்களுக்கு அதே பொருள் உள்ள வேறு சொற்களை எழுது:

இலேசு, பிரதேசம், ஆகாரம், சண்டை,

2. கீழ் உள்ள சொற்களில் ஒருமைக்குப் பன்மையும், பன்மைக்கு ஒருமையும் எழுது:

கூடாரம், வார்த்தை, நாய்கள், சக்கரங்கள்.

3. பரந்த. உறைந்து, இலேசாக, ஆகாரம்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

# 16. நற்பழக்கம்

ஈசனளித்த அறிவிருந்தும் நல்ல
இயற்கை விதிகளை விட்டுவிட்டு,
மோசம் மிகுந்த பகட்டுடை வாழ்க்கையில்
மோகம் வைத்தே இந்த மோசமுற்றோம்.

சுத்த உணவிலும் சுத்த உடையிலும்
சொன்ன விதிகளை விட்டுவிட்டோம்;
நித்தம் குளிப்பதும் பத்தியம் காப்பதும்
மெத்தக் குறைந்தது தேசத்திலே. (2)

காலையில் எழுந்து நீராடல்; கொஞ்சம்
கர்த்தனை எண்ணித் துதிபாடல்;
மாலையில் ஓடி விளையாடல்; இந்த
மார்க்கத்தை விட்டனர் மக்களெல்லாம்.

அளவை அறிந்து புசிப்பதில்லை; தங்கள்
அளவை அளந்து வசிப்பதில்லை;
களவுக்குப் பின்னால் கதவை அடைப்பவர்
காரியம் போலடி, கண்மணியே! (4)

நல்ல வழக்கங்கள் உள்ளவர் தங்களை
நாடுமோ நோவுகள் எந்நாளும்?
நல்ல வழக்கங்கள் நாளும் வளர்ந்தினி
நாடு செழித்திட வேணுமடி! (5)

—நாமக்கல் கவிஞர்.

| | | |
|---|---|---|
| ஈசன் | நாடும் | மோசம் |
| வாழ்க்கை | இயற்கை | மெத்த |
| நீராடல் | நித்தம் | களவு |
| வழக்கம் | துதி | பகட்டு |
| அளித்த | விதி | தேசம் |
| மோகம் | பத்தியம் | காரியம் |
| கர்த்தன் | மார்க்கம் | |

**கேள்விகள்**

1. சுகவாழ்விற்கான பழக்கங்கள் யாவை?
2. எப்படிப்பட்டவரை நோய் அணுகாது?
3. நாடு எப்பொழுது செழிப்படையும்?

பயிற்சி

1. நற்பழக்கத்தைப் பற்றி மூன்று பழமொழிகளை எழுது.

2. எதிர்ச்சொற்களை எழுது:—

நியாயம், ஜயம், சண்டை, இயற்கை.

3. கீழே உள்ள வாக்கியங்கள் சரியா, தவரு எனச் சொல்லு: சரியானால் வாக்கியத்திற்கு நேராக (√) இக்குறி இடு: தவருனால் (X) இக்குறி இடு.

1. நாம் தினந்தோறும் குளிக்கவேண்டும்.
2. காலையில் குளிப்பது நல்லது அன்று,
3. மாலையில் படிப்பது நல்லது.
4. அளவு அறிந்து உண்ண வேண்டும்.
5. பகட்டாக வாழத் தெரிந்துகொள்.

4. கோடிட்ட இடங்களில் பொறுத்தமான சொற்களை அமைத்து எழுது.

1. நல்ல——உள்ளவரை——நாடமாட்டா.
2. நாம்——உணவை உட்கொள்ளவேண்டும்.
3. பகட்டு——மோகம் கொள்ளாதே.
4. தினமும்——துதி செய்.

# 17. பலசாலி யார்?

1. ஓர் ஊரில் ஒரு செட்டியும், ஒரு வலைஞனும், ஒரு வேடனும் நண்பர்களாக இருந்தார்கள். சிறு குழந்தையாக இருந்த பொழுதே செட்டி தவலை சாதம் சாப்பிடுவான்! வலைஞன் சமுத்திரத்தின் நடுவில் வலை வீசிப் பெரிய மீனைப் பிடிப்பான்! வேடன் கழக்கோடி ஆடுவதில் கைதேர்ந்தவன். மலைதான் அவனுக்குக் கழக்கோடி! இம்மூவரும் மிகுந்த பலசாலிகள்.

ஒரு நாள் இம்மூவரும் தேச யாத்திரை புறப்பட்டார்கள்; வழியில் ஒரு காட்டை அடைந்தார்கள். அங்கே அவர்களுக்குத் தாகம் எடுத்தது. வயலில் உழுதுகொண்டிருந்த குடியானவன் ஒருவனை அவர்கள் கண்டார்கள். அவனுக்குப் புலி உழவு மாடாக இருந்தது! அவன் ஒரு பாம்பைச் சாட்டையாக கையில் வைத்திருந்தான்!

3. மூன்று நண்பர்களும் அவனிடம் தாகத்திற்காக தண்ணீர் கேட்டனர், குடியானவன் தொலைவில் இருந்த ஒரு கிணற்றை அவர்களுக்குக் காட்டினான். அக்கிணற்றின் மேலே ஒரு பாறை மூடப்பட்டிருந்தது. அதை நண்பர்களால் அகற்ற முடியவில்லை! குடியானவன் வந்து ஒரே உதையில் அப்

பாறையைக் கீழே தள்ளினன்! மூவரும் தாகத்தைத் தீர்த்துக்கொண்டனர்.

4. அப்பொழுது அங்கே ஒரு பெண் வந்தாள். அவள் ஒரு கைவண்டியைத் தள்ளிக்கொண்டு வந்தாள். அதில் சாதம் மலைபோல் குவிந்திருந்தது! அவள் தலையில் இருந்த கூடையில் பட்சணங்கள் இருந்தன. குடியானவன் எல்லாவற்றையும் தின்றான்; மூன்று நபர்களுக்கும் கொடுத்தான். ஆனால் அவர்களால் ஒரு பிடி சாதத்திற்கு மேல் உண்ண முடியவில்லை! அந்தப் பெண் திரும்பிச் சென்றாள்,

5. குடியானவன் மூவரையும் பார்த்து, "இவள் என் மனைவி. இவளை ஒரு அரக்கன் எடுத்துக்கொண்டு போயிருக்கிறான். அவன் இல்லாதபொழுது இவள் எனக்கு உணவு அளிக்கிறாள். அரக்கனைக் கொல்ல நீங்கள் எனக்கு உதவவேண்டும்" என்று கேட்டுக் கொண்டான். உடனே நால்வரும் அரக்கனுடைய வீட்டுக்குப் போனார்கள்.

6. செட்டிப்பிள்ளை வீட்டு வாயிற் கதவின் மேல் உட்கார்ந்தான். வேடன் உள்ளே கட்டிலின் கீழே மறைந்து கொண்டான்; குடியானவன் கதவு இடுக்கிலும், வலைஞன் கூரையிலும், பதுங்கிக் கொண்டனர். அரக்கன் வீட்டிற்கு வந்தான். அவனைக் கண்டதும் எல்லோரும் நடுங்கினர்!

அரக்கன் உணவு சாப்பிட்டபின் கட்டிலின் மேல் படுத்துக்கொண்டான். அவனுக்குத் தும்மல் வந்தது. அந்த அதிர்ச்சியில் நால் வரும் பயந்து வெளியில் ஓடினர்கள். அரக் கன் அவர்களைத் துரத்திக்கொண்டு ஓடி னன்.

7. ஓடிக்கொண்டிருந்த நால்வரும் ஒரு கிழவியைப் பார்த்தனர். அவள் பஞ்சு பொறுக்கிக் கொண்டிருந்தாள். " எங்களைக் காப்பாற்று " என்று நால்வரும் அவளைக் கேட்டுக் கொண்டனர். அவள் அவர்களைத் தன் மடியில் கட்டிக்கொண்டாள்!

8. ஓடிவந்த அரக்கன், பாட்டியை " அவர்கள் எங்கே ?" என்று கேட்டான், " தெரியாது " என்றுள் பாட்டி. அரக்கன் அவளை மிரட்டினன். கிழவி கோபம் கொண்டு இடக்கையால் அவன் கன்னத் தில் ஓர் அறை கொடுத்தாள்! அரக்கன் உடனே கீழே வழுந்து இறந்தான்!

9. சிறிது நேரம் கழித்துப் பாட்டி தனது மடியை உதறினுள். பஞ்சுடன் மூவர் வெளியே வந்தனர்! ஆனல் செட்டி காணப் படவில்லை! பாட்டி ஒரு கம்பை எடுத்துப் பஞ்சைக் கிளறினுள்! அதில் ஒரு பூச்சி இருந்தது! அதன் வயிறு பருத்திருந்தது! பாட்டி அதை விண்டாள்! உள்ளே செட்டி. பிள்ளையார் போல உட்கார்ந்து இருந்தான்!

10. நால்வரும் கிழவியை வணங்கினார்கள். குடியானவன் வீடு சென்றான். மற்ற மூவரும் தங்கள் வழியே சென்றனர். கிழவி மறுபடியும் பஞ்சு பொறுக்க ஆரம்பித்தாள்! இவர்களில் மிகுந்த பலசாலி யார்?

| | | |
|---|---|---|
| வலைஞன் | தும்மல் | தள்ளினான் |
| கைதேர்ந்தவன் | கன்னம் | உதவ |
| பாறை | விண்டாள் | பஞ்சு |
| பிடி | சமுத்திரம் | உதறினாள் |
| நடுங்கினர் | தாகம் | கழக்கோடி |
| மிரட்டினான் | உதை | சாட்டை |
| பருத்து | அரக்கன் | பட்சணம் |
| சினேகிதர் | அதிர்ச்சி | இடுக்கு |
| புறப்பட்டார்கள் | இறந்தான் | மடியில் |
| அகற்ற | தூண்டில் | கிளறினாள் |
| மனைவி | உழவு மாடு | |

## கேள்விகள்

1. மூன்று நபர்களும் பலசாலிகள் என்று எவ்வாறு சொல்லலாம்?

2. குடியானவனை எவ்வாறு பலசாலி என்று சொல்லலாம்?

3. குடியானவன் நண்பர்களிடம் கேட்ட உதவி என்ன?

4. நால்வரும் அரக்கன் வீட்டை விட்டு ஏன் ஓடினார்கள்?

5. கிழவி நால்வரையும் எப்படிக் காப்பாற்றினாள்?

6. அரக்கன் எவ்வாறு இறந்தான்?

7. செட்டியைக் கிழவி எப்படி வெளிப்படுத்தினாள்?

8. செட்டி, வலைஞன், வேடன், குடியானவன், அரக்கன், கிழவி—இவர்களில் மிகுந்த பலசாலி யார்?

### பயிற்சி

1. இந்தக் கதையைச் சுருக்கமாகச் சொல்லு.

2. இதே பொருள் உடைய வேறுசொற்களை எழுது:

சமுத்திரம், கைதேர்ந்தவன், சிநேகிதர், மனைவி, இறந்தான்.

3. புலிகள், பாம்பு, கிழவி, காடுகள், பூச்சி, மனைவி, வேடர்கள்—இவை ஒவ்வொன்றும் ஒருமையா, பன்மையா என்று கூறு.

### தெரிந்துகொள்

மீன் பிடிப்பவன் வலைஞன்.
வேட்டை ஆடுகிறவன் வேடன்.
வீடு கட்டுகிறவன் கொத்தன்.
துணி நெய்கிறவன் சேணியன்,
பித்தளைச் சாமான் செய்கிறவன் கன்னான்.

### இலக்கணம்

வினைச் சொற்களுக்கும் ஒருமை, பன்மை உண்டு.

(உ-ம்) புலி பாய்ந்தது—ஒருமை வாக்கியம்.
புலிகள் பாய்ந்தன—பன்மை வாக்கியம்.

பின் வரும் வாக்கியங்களைப் பன்மையாக மாற்று:

1. வலைஞன் மீன் பிடிப்பான்.
2. குடியானவன் ஏர் உழுகிறான்.
3. பெண் பட்சணம் கொடுத்தாள்.
4. கிழவி பஞ்சு பொறுக்கினாள்.
5. பூச்சி பஞ்சில் இருந்தது.

# 18. நான் யார் ?

1. வாய்க்கால் வெட்டி வரப்புக் கட்டி.
ஈர்க்கு முற்றி இலை பழுத்து,
இலை முற்றிக் காய் காய்த்து,
காய் முற்றிப் பழம் ஆவேன்!

நான் யார் ? (யிநெபற்ர்)

2; பொட்டுப் போல் இலை உடை யேன்;
பொரி போலப் பூ உள்ளேன்;
தின்னக் காய் காய்ப்பேன்;
தின்னுத பழம் ஆவேன் !

நான் யார் ? (ரமுங்ருகைம்ம)

3. பேச்சில்லை ; பெருமூச்சு விடு வேன் ;
உயிரில்லை ; ஊரைச் சுமப்பேன் ;
சாதமில்லை; தண்ணீர் குடிப்பேன்;
குரலில்லை ; கூச்சல் இடுவேன் ;
மழையில் நனைவேன் ; வெயிலில் காய்வேன் ;

கண்ட துண்டமாகக் கரியைத் தின்பேன் ;
எப்படிச் சொன்னுலும் அப்படிக் கேட்பேன்!

நான் யார் ? (யிரல்ண்வடி)

| | | |
|---|---|---|
| வாய்க்கால் | பொரி | கூச்சல் |
| வரப்பு | பெருமூச்சு | காய்வேன் |
| ஈர்க்கு | உயிர் | கரி |
| கண்டதுண்டம் | | |

## கேள்வி

1. விடுகதைகளுக்குச் சரியான விடைகளைக் கண்டு பிடித்து எழுது.

## பயிற்சி

1. இவைபோல் ஐந்து விடுகவிகளைத் தொடுத்து எழுது.

2. உனக்குத் தெரிந்த காய்களையும், பழங்களையும், பயிர்களையும் எழுது.

## தெரிந்துகொள்

1. கரியினால் அடுப்பு எரிக்கலாம்.

கறி சமைத்து உணவுடன் உண்ணலாம்.

**கரி**, **கறி** என்ற இரு சொற்களின் பொருள் வேறு பாட்டைத் தெரிந்து கொள். இதே போல் **எரி**, எறி; பொரி **பொறி**; **பரி**, பறி; **அரை**, அறை; **மாரி**, மாறி: **இரை**, **இறை**; என்ற சொற்களின் பொருள்களைத் தெரிந்கொள்.

## இலக்கணம்

| ஒருமை | பன்மை |
|---|---|
| நான் | நாம், நாங்கள் |
| நீ | நீர், நீங்கள் |
| அது | அவை, அவைகள் |
| இது | இவை, இவைகள் |
| எது | எவை எவைகள் |
| அவன், அவள் | அவர், அவர்கள் |
| இவன், இவள் | இவர், இவர்கள் |




## 19. மழை உண்டாகும் விதம்

[ஒரு நாள் மாலை சுந்தரம் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்கு வருகிறான். வரும் வழியில் கனத்த மழை பெய்கிறது. மழையில் நனைந்து கொண்டே சுந்தரம் வீடு சேருகிறான். தாயார் அவனுக்கு வேறு உடை கொடுக்கிறாள்.]

சுந்தரம்;--அம்மா ! நான் வரும் வழியில் மழை பிடித்துக்கொண்டது. தங்குவதற்கு இடம் இல்லை. நனைந்து கொண்டே ஓட்டமாய் வந்து சேர்ந்தேன். ஆகாயத்தில் "பளிச் பளிச்" என்று மின்னல் தோன்றிற்று ; இடி இடித்தது. இவை எப்படி உண்டாகின்றன ?

**அம்மா:**--ஆகாயத்தில் திரியும் மேகங்களை நீ பார்த்திருக்கிறாய் அல்லவா ?

**சுந்தரம்;**--பார்த்திருக்கிறேன் அம்மா! இன்று அவை கருமையாக இருந்தன.

**அம்மா:**--அந்தக் கருமேகங்கள் காற்றினுல் அங்கும் இங்கும் தள்ளப்படுகின்றன. அதனுல் அவை ஒன்ருேடொன்று மோதுகின்றன. அப்பொழுது இடியும் மின்னலும் உண்டாகின்றன. இடியும் மின்னலும் தோன்றினுல் மழை நிச்சயமாக வரும்.

**சுந்தரம்.**--அம்மா! மழை எப்படி உண்டாகிறது?

**அம்மா:**--தண்ணீரைக் காய்ச்சும் பொழுது, புகை மேலே கிளம்பிப் போவதைப் பார்த்திருக்கிருயா?

**சுந்தரம்;**—பார்த்திருக்கிறேன். அன்று ஒரு நாள் என் பலகையை அந்தப் புகையில் காட்டினேன். அப்பொழுது பலகையில் நீர்த் துளிகள் தோன்றின. நானும் பலகையைத் துடைத்துக் கொண்டேன்.

**அம்மா:**--நீ நன்ருகக் கவனித்திருக்கிருய். மேலே கிளம்பிச் செல்வது புகையல்ல, அதற்கு நீராவி என்பது பெயர். தீயினுல் தண்ணீர் ஆவியாக மாறுகிறது. அந்த ஆவியின் மேல் குளிர்ந்த காற்று வீசினுல், அது மீண்டும் தண்ணீராக மாறுகிறது.

**சுந்தரம்:**--மழைக்கும் இதற்கும் என்னம்மா சம்பந்தம்?

அம்மா:—நீராவி மீண்டும் தண்ணீராக உன் பலகையில் விழுந்தது அல்லவா ? அதே போல் மழையும் பெய்கிறது. பூமியில், கடல், ஆறு, குளம், குட்டை முதலிய நீர் நிலைகள் இருக்கின்றன. அவற்றிலுள்ள தண்ணீர் சூரிய வெப்பத்தினுல் நீராவியாக மாறுகிறது. இந்த ஆவி காற்றைவிட இலே சானது; அதனுல் அது மேலே கிளம்பிப் போகிறது. அதுதான் **மேகம்** என்பது. இந்த மேகத்தின் மேல் வானத்திலுள்ள குளிர்ந்த காற்று தாக்கினுல், ஆவி குளிர்ந்து தண்ணீராக மாறுகிறது. தண்ணீர் காற்றைவிடக் கனமானது ; அதனுல் அது மழையாகப் பூமியின்மீது பெய்கிறது.

**சுந்தரம்:**—அப்படியா அம்மா! மழையினுல் என்ன உபயோகம் ?

**அம்மா**—மழை இல்லாவிட்டால் பயிர் பச்சைகள் வளர மாட்டா ; உணவுப் பொருள்கள் விளையமாட்டா ; குளிக்கவும் குடிக்கவும் தண்ணீர் இராது ; மனிதர்களும் பிரயாணிகளும் உயிர் வாழ முடியாது. " மாரி அல்லது காரியம் இல்லை "

| | | |
|---|---|---|
| கனத்த | புகை | ஆவி |
| தங்குவதற்கு | கிளம்பி | மாறுகிறது |
| ஆகாயம் | நீர்த்துளி | மீண்டும் |
| கருமேகம் | துடைத்து | நீர்நிலை |
| அங்குமிங்கும் | கவனம் | தாக்கினுல் |
| ஒன்றேடொன்று | நீராவி | இராது |
| நிச்சயம் | நீ | மாரி |

### கேள்விகள்

1. நீராவி என்பது யாது?
2. நீர்நிலை என்பது யாது?
3. இடியும் மின்னலும் எவ்வாறு உண்டாகின்றன?
4. பலகையில் நீர்த்துளிகள் எவ்வாறு தோன்றின?
5. மேகம் என்பது என்ன?
6. மழை எப்படி உண்டாகின்றது?
7. மழையினுல் என்ன பயன்?

### பயிற்சி

1. கீழுள்ள சொற்களுக்கு அதே பொருள் கொண்ட வேறு சொற்களை எழுது: மீண்டும், ஆகாயம், மாரி, தீ, இராது.

2. எதிர்ச்சொற்களை எழுது, கனம், இராது: கருமை, தீ, வாழ்வு.

3. உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது:- ஒன்றேடொன்று, நிச்சயம், நீராவி, கருமேகம், அங்குமிங்கும்.

4. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை அமைத்து எழுது:

கருமேகங்கள் காற்றினுல்——தள்ளப்படுகின்றன.
இடியும் மின்னலும் தோன்றினுல் மழை——வரும்.
தீயினுல்——ஆவியாக மாறும்.
நீராவி காற்றைவிட——.
மாரி அல்லது——இல்லை.

### இலக்கணம்

சுந்தரம், கோபு—ஆண்களின் பெயர்கள்.
வள்ளி, கமலா—பெண்களின் பெயர்கள்.

ஆண்களைக் குறிக்கும் சொற்கள் ஆண்பால் என்றும், பெண்களைக் குறிக்கும் சொற்கள் பெண்பால் என்றும் சொல்லப்படும்

| ஆண்பால் | பெண்பால் |
|---|---|
| பையன் | பெண் |
| தகப்பனுர் | தாயார் |
| மகன் | மகள் |
| மாமன் | மாமி |
| அண்ணன் | அக்காள் |
| தம்பி | தங்கை |

# 20. பூமி குளிர்ந்தது

நல்ல மழை பெய்ததனுல்
நாடு செழித்ததப்பா.
பூமி குளிர்ந்ததுவே ;
பொய்கைகள் நிரம்பினவே,
ஏரிகள் நிரம்பினவே ;
எதிர்த்ததே ஏகவெள்ளம்.
ஆறுகள் நிரம்பினவே ;
அணைகள் அழிந்தனவே,
குளங்கள் நிரம்பினவே
குதித்தன மீன்களெல்லாம்.
தருக்கள் தளிர்த்தனவே ;
தாமரைகள் பூத்தனவே.
செடிகள் கொடிகள் எல்லாம்
செழிப்பாய்த் தளிர்த்தனவே.
செந்நெல் விளைந்ததுவே ;
தேசம் செழித்ததுவே

—அல்லி அரசாணிமாலை



| | | |
|---|---|---|
| தரு | தளிர்த்தன | நிரம்பின |
| பொய்கை | செந்நெல் | செழிப்பு |

### கேள்வி

1. மழையினால் என்ன உபயோகம் ?

### தெரிந்துகொள்

செழிப்பு × கருப்பு

மழை மலை

### பயிற்சி

1. மழையைப் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது.
2. மழை பெய்யாவிடில் நாடு எப்படி இருக்கும் ?

### இலக்கணம்

செழிப்பு—இச் சொல்லில் நான்கு எழுத்துக்கள் உள்ளன : செ | ழி | ப் | பு. இதுவரை நீ கற்றுக்கொண்ட எழுத்துக்களை எழுதி அவற்றை வரிசைப்படுத்து. இப் புத்தகத்தின் கடைசியில் உள்ள எழுத்து வரிசையைக் கவனித்து, நீ இதுவரை கற்றுக்கொள்ளாத எழுத்துக்களைக் கற்றுக்கொள்.

பல எழுத்துக்கள் சேர்ந்தது ஒரு சொல்,

பல சொற்கள் சேர்ந்தது ஒரு சொற்றொடர்.

பல சொற்கள் சேர்ந்து ஒரு முடிவான கருத்தைத் தெரிவிப்பது ஒரு வாக்கியம் பல வாக்கியங்கள் சேர்ந்தது ஒரு பத்தி அல்லது பாரா.

ஹ, ஸ்ரீ—இந்த இரண்டு எழுத்துக்களையும் கற்றுக்கொள். ஹனுமார், ஹாரம், ஹம்சம். ஸ்ரீராமன், ஸ்ரீமதி, ஜயஸ்ரீ—இவற்றைப்படி.



# 21. உப்பு

1. உவர்ப்பு என்பது அறுவகைச் சுவைகளில் ஒன்று. இந்தச் சுவை உப்பினுல் உண்டாகிறது. இனிப்புத் தினுசுகள் தவிர மற்ற எல்லாப் பண்டங்களுக்கும் உப்பு அவசியம். 'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே' என்னும் பழமொழி இந்த உண்மையை விளக்குகிறது.

2. உப்பின் நிறம் வெண்மை. பழுப்பு நிறமான உப்பும் உண்டு. ஆனுல் இது உப்பின் நிறம் அன்று; உப்புடன் கலந்துள்ள அழுக்கினுல் இந்த நிறம் உண்டாகிறது. உப்பைத் தண்ணீரில் கரைத்தால் இந்த அழுக்கு நன்ருகத் தெரியும்.

3. கடல் நீரிலிருந்து உப்பு எடுக்கப் படுகிறது. கடல் நீரைச் சிறு வாய்க்கால்

களில் பாய்ச்சிப் பெரிய தொட்டிகளில் நிரப்புவார்கள். இந்த நீரைச் சிறிது சிறிதாகப் பாத்திகளில் பாய்ச்சுவார்கள். தண்ணீர் சிறிதும் ஊருதபடி பாத்திகளின் தரை கடினமாக இருக்கும். பாத்திகளில் உள்ள கடல்நீர், சூரிய வெப்பத்திஞல் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து, முழுவதும் வற்றிப் போகும்; உப்பு மட்டும் சிறு சிறு கற்களாகப் பாத்திகளில் காணப்படும். இவற்றை நன்ருக உலர்த்தி சிறு சிறு குவியல்களாகச் சேர்த்து எடுத்துக் கொள்வார்கள். உப்பு தயாரிக்கப்படும் இடத்திற்கு உப்பளம் என்று பெயர்.

4. நிலத்திலிருந்தும் உப்பு எடுக்கப்படுவது உண்டு. பூமிக்குள் சுரங்கங்கள் வெட்டி, மண்ணுடன் கலந்துள்ள உப்பை எடுக்கிருர்கள். அதிலிருந்து உப்பை மட்டும் பிரித்து எடுத்துச் சுத்தம் செய்வார்கள்.

5. நமது உடல் வளர்ச்சிக்கு உப்பு இன்றியமையாதது. அது நமது ஜீரண சக்தியை வளர்க்கிறது; உடலில் உள்ள எலும்புகளே உறுதிப்படுத்துகிறது. உப்பைச் சேர்க்காவிட்டால் உணவுப் பொருள்கள் விரைவில் கெட்டுவிடும். உப்பைச் சேர்த்துக் கொள்ளாதவர்களே உலகில் இல்லே. 'உப்பு இன்றேல் உயிரில்லே' என்றும்

சொல்லலாம். உப்பு ஏழையின் நண்பன்: அதன் விலையும் குறைவு.

**"உப்பிட்டவரை உள்ளளவும் நினை"**

| | | |
|---|---|---|
| உண்டி | குப்பை | பழுப்பு |
| தொட்டி | பாத்தி | கற்கள் |
| பின்னர் | உப்பளம் | பூமி |
| ஜீரணம் | எலும்பு | வளர்ச்சி |
| பெரிதும் | விளக்குகிறது | அழுக்கு |
| நிரப்பு | வற்றி | உலர்த்தி |
| வியாபாரி | சுரங்கம் | இன்றியமையாதது |
| சக்தி | இன்றேல் | விரைவில் |

**கேள்விகள்**

1. உப்பின் உண்மை நிறம் யாது?
2. உப்புக்குப் பழுப்பு நிறம் எப்படி உண்டாகிறது?
3. உப்பு எங்கெங்கிருந்து எடுக்கப்படுகிறது?
4. கடல் நீரிலிருந்து உப்பு எவ்வாறு எடுக்கப்படுகிறது?
5. நிலத்திலிருந்து உப்பு எவ்வாறு எடுக்கப்படுகிறது?
6. உப்பினால் என்ன உபயோகம்?

**பயிற்சி**

1. சுவைகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

3. சுவைகளுள் ஒவ்வொன்றுக்கும் ஓர் உதாரணம் சொல்லு.

3. உப்பைப் பற்றி வழக்கத்திலுள்ள இரண்டு பழமொழிகளை எழுது.

4, இன்றியமையாதது, அழுக்கு, வாய்க்கால், சிறிது சிறிதாக, விற்பனை சுரங்கம்—இச்சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

5. உண்மை, அல்ல, குறைவு, உலர்தல், பிரித்து, ஏழை—இச்சொற்களுக்கு எதிர்ச்சொற்களை எழுது.

6. மூன்ரும் பத்தியில் உள்ள ஒருமை பன்மைகளைப் பிரித்து எழுது.

7. கீழ்க்காணும் பத்தியை மனத்திற்குள்ளே படித்து, அதில் உள்ள விஷயத்தை உன் சிற்றப்பாவிடம் சொல்வது போல் எழுது.

இன்று காலை நான் சிற்றப்பாவின் வீட்டிற்குச் சென்றேன். சிற்றப்பா வீட்டில் இல்லை ; அவர் அத்தையின் வீட்டிற்குப் போயிருந்தார். சித்தி வேலைக்காரனை அனுப்பி, நான் வந்ததை அவரிடம் சொல்லிவிட்டு வரும்படி சொன்னுள். திரும்பி வரும்பொழுது அவனை ஒரு படி உப்பு வாங்கிக்கொண்டு வரச் சொன்னுள்.




## 22. துஷ்டருடன் உறவாடாதே

1. கண்ணமங்கலம் என்ற கிராமத்தில் கண்ணன் என்றபெயருள்ள சிறுவன் ஒருவன் இருந்தான். அவனுடைய குழந்தைப் பருவத்திலேயே அவன் தகப்பனுர் இறந்து போய் விட்டார். அவன் தாயார் அவனை அருமையாக வளர்த்து வந்தார்.

2. கண்ணனைத் தாயார் பள்ளிக்கூடத்தில் சேர்த்தார். ஆனுல் அவன் படிக்காமல் வீணுகக் காலம் கழித்தான். தாயார் சொல்லும் புத்திமதிகளைக் கண்ணன் கேட்கவில்லை. அந்த ஊரிலுள்ள சில துஷ்டர்களுடன் சேர்ந்துகொண்டு திரிய ஆரம்பித்தான்.

3, கண்ணன், கைச்செலவுக்குப் பணம் வேண்டும் என்று தன் தாயாரை அடிக்கடி கேட்பான்; தாயாரும்கொடுப்பாள். ஒரு நாள் இரவு, கண்ணன், தாயாரைக் கேட்காமல் அவள் பெட்டியில் இருந்த நூறு ரூபாய்களை எடுத்துக்கொண்டான். நான்கு நண்பர்களுடன் அன்றே சென்னைக்குப் புறப்பட்டான். காலையில் எல்லாரும் சென்னை சேர்ந்தார்கள். ஓர் உணவு விடுதியில் தங்கினுர்கள்.

4. சென்னைக் காட்சிகள் அவர்களுக்கு வெகு விநோதமாயிருந்தன. விடுதியில் உண்பதும், நன்ருக உடைபோட்டுக் கொண்டு ஊர் சுற்றுவதுமாக ஐந்து நாட்கள் அவர்கள் கழித்தார்கள். பணத்தை எல்லாம் அவர்களுள் ஒருவனுன வையாபுரி என்பவன் தன் இஷ்டம் போல் செலவழித்து வந்தான். பணம் கரைய ஆரம்பித்தது. ஆரும் நாள் காலை கண்ணன் விழித்தெழுந்தபொழுது அறையில் நண்பர்களைக் காணுமல் திகைத்தான்.

5, கண்ணன் கையில் காலணுவும் இல்லை. பசி காதை அடைத்தது. பணம் கொடுக்காததால். கண்ணன் உணவு விடுதியிலிருந்து விரட்டப்பட்டான். அழுக்கு உடையுடன் அவன் விடுதியை விட்டு வெளிவந்து, தெருத்தெருவாக அலேந்தான். கண்ணன் கண்ணீர் விட்டுக் கலங்கினுன் ;

வேலை தேடி அலைந்தான். கடைசியில், புகைவண்டி நிலையத்தில் போர்ட்டர் ஆனான். சில நாட்கள் கழிந்தன ; கையில் கொஞ்சம் பணம் சேர்ந்தது.

6. கண்ணமங்கலத்தில் தாயார் கண்ணனைக் காணாமல் வருந்தி வாடிப்போனாள். ஒரு நாள் மாலை யாரோ தெருக் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. அவள் கதவைத் திறந்தாள். எலும்புக்கூடுபோல் ஒரு சிறுவன் நின்று கொண்டிருந்தான். "கண்ணா!" என்று தாவிச் சென்று மகனைக் கட்டிக் கொண்டாள் தாயார். கண்ணனும் தாயாரின் காலில் விழுந்து வணங்கினான் ; தன் தவறுகளை மன்னிக்கும்படி வேண்டினான். "இனிமேல் துஷ்டர்களுடன் சேருவதில்லை: புத்தியுடன் பிழைக்கிறேன்" என்று தாயாரிடம் சொன்னான். தாயாரும் ஆனந்தம் அடைந்தாள். அன்று முதல் கண்ணன் நேர்மையாக நடந்து வந்தான்.

| | | |
|---|---|---|
| பருவம் | வீணாக | திகைத்தான் |
| செலவு | தங்கினார்கள் | மன்னிப்பு |
| இஷ்டம் | விழித்து | தெருத்தெருவாக |
| நிலையம் | நேர்மை | துஷ்டர் |
| ஆனந்தம் | வேண்டினான் | விநோதம் |
| அருமையாக | புத்திமதி | அலைந்தான் |
| உணவு விடுதி | காட்சி | புத்தி |

**கேள்விகள்**

1. கண்ணன் ஏன் படிக்கவில்லை ?
2. கண்ணன் சென்னைக்கு எப்படிப் போனான் ?

3. சென்னையில், கண்ணனும் அவன் நண்பர்களும் எவ்வாறு காலங்கழித்தனர் ?

4. கண்ணனை நண்பர்கள் ஏன் விட்டுப் பிரிந்தனர்?

5. கண்ணனுக்கு என்ன வேலை கிடைத்தது?

6. வீடு திரும்பினதும் கண்ணன் தாயாரிடம் என்ன சொன்னான் ?

### பயிற்சி

1. கண்ணன் சென்னையில் தனக்கு உண்டான கஷ்டத்தைத் தன் தாயாரிடம் சொல்லுவதுபோல் சொல்லு.

2. ஆனந்தம், நேர்மை, தவறு, புத்திமதி, மன்னிப்பு, விநோதம்—இச்சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. செலவு, ஆனந்தம், விழிப்பு, தவறு, துஷ்டர்—இச்சொற்களுக்குக் கீழுள்ளவற்றிலிருந்து எதிர்ச்சொற்களை எடுத்து எழுது :

தூக்கம், இஷ்டர், வரவு, துக்கம், சரி.

4. அ, ஆ, இ, ஈ,.........ஔ என்ற உயிர் எழுத்துக்களில் ஆரம்பிக்கும் சொற்களை எழுது.

(உ-ம்.) அருமை, ஆனந்தம்.

### தெரிந்துகொள்

உணவு + விடுதி = உணவு விடுதி. தலை + வலி = தலை வலி. வாழை + பழம் = வாழைப்பழம். குழந்தை + பருவம் = குழந்தைப்பருவம். எலும்பு + கூடு = எலும்புக்கூடு. பால் + ஆறு = பாலாறு.

### இலக்கணம்

கீழுள்ள வாக்கியங்களைப் பன்மையாக மாற்று.

1. அவனை நண்பன் ஏமாற்றினான்.
2. அந்தப் பையன் துஷ்டன்.
3. வீட்டில் நான் சமையல் செய்தேன்.
4. அவனுக்குச் சென்னைக் காட்சி விநோதமாக இருந்தது.

---




## 23. உண்மையுள்ள வேலைக்காரன்

1. ஒரு ஊரில் ஒரு பெரிய பணக்காரர் இருந்தார். ஆனால் அவர் பணத்தைச் செலவு செய்வதில்லை; வயிறாரச் சாப்பிடுவதும் இல்லை, ஒருவருக்கும் உபகாரம் செய்வதில்லை. அவரிடம் ஒரு வேலைக்காரன் இருந்தான். அவனிடம் அவர் நாள் முழுவதும் வேலை வாங்குவார்; ஆனால் அவனுக்குச் சம்பளம் மிகக் குறைவாகவே கொடுப்பார்.

2. பணக்காரர் தமக்கு என்று ஒரு பெரிய மாளிகை கட்டினார்; ஒரு நல்ல தினத்தில் அந்த மாளிகையில் குடியேறினார். நள்ளிரவில் 'விழட்டுமா? விழட்டுமா?'

என்று ஒரு குரல் கேட்டது. அந்தக் குரலைக் கேட்டு அவர் நடு நடுங்கினார் ; விளக்கு ஏற்றிக்கொண்டு மாளிகை முழுவதும் சுற்றிப் பார்த்தார் ; ஒருவரையும் காணவில்லை. மறு படி படுத்துக் கொண்டதும். மீண்டும் அந் தக் குரல் கேட்டது.

3. பணக்காரருக்குப் பயம் அதிகமா யிற்று. இரவு முழுதும் அவர் தூங்கவில்லை. வீட்டில் ஏதோ பேய் இருக்கிறதென்று நிச்ச யித்தார் ; 'இங்கே இன்னும் இருந்தால் அது நம்மைக் கொன்றுவிடும்' என்று பயந்தார் ; மறுநாள் காலை, மீண்டும் பழைய வீட்டிற்கே போய்விட்டார்.

4. அன்றிரவு வேலைக்காரன் மட்டும் மாளிகையில் படுத்துக் கொண்டான். முன் போலவே 'விழட்டுமா? விழட்டுமா ?' என்ற குரல் கேட்டது. வேலைக்காரன் முதலில் பயந்தான். மீண்டும் அதே குரல் கேட்டது. இப்பொழுது கொஞ்சம் தைரியம் அடைந் தான். 'விழு' என்று பதில் சொன்னான். உடனே மேலிருந்து ஒரு மூட்டை கீழே விழுந்தது. மூட்டையைப் பிரித்துப் பார்த் தான். அதில் பொன் நாணயங்கள் இருந் தன ! அப்படியே மூட்டையைக் கட்டி பத்திர மாக வைத்தான்.

5. அதிகாலையில் பணக்காரர் எழுந் தார் ; உடனே மாளிகையைப் பார்க்கச்

சென்றார். அவரைக் கண்டவுடனே வேலைக்காரன் பணமூட்டையை அவருக்கு முன்னால் வைத்தான். முதல் நாள் இரவு அந்த மூட்டை கிடைத்த வரலாற்றை சொன்னான். பிரபு தம் வேலைக்காரனுடைய நற்குணத்தை மெச்சினார்; அவனுக்கே அந்தப் பணத்தைக் கொடுத்தார்; அன்று முதல் அவன் சம்பளத்தையும் உயர்த்தினார்; தம்மிடம் இருந்த செல்வத்தைப் பிறருக்கு உதவினார்; ஊரில் ஒரு பள்ளிக்கூடம் வைத்துக் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டினார். ஊரார் அவரைக் கொண்டாடினார்கள்.

| | | |
|---|---|---|
| வயிறார | வரலாறு | நாணயம் |
| நள்ளிரவு | சம்பளம் | உயர்த்தினார் |
| அதிகாலை | தைரியம் | குடியேறினார் |
| உபகாரம் | நற்குணம் | பத்திரம் |
| பேய் | மாளிகை | செல்வம் |
| | புகட்டினார் | |

**கேள்விகள்**

1. பணக்காரர் எப்படிப்பட்ட குணம் உடையவர்?

2. பணக்காரர் மாளிகையை விட்டு ஏன் பழைய வீட்டிற்குச் சென்றார்?

3. வேலைக்காரனுக்கு மாளிகையில் பணமூட்டை எப்படிக் கிடைத்தது?

4. வேலையாள் பணமூட்டையை என்ன செய்தான்?

5. பிரபு வேலையாளுக்கும் ஊராருக்கும் செய்த நன்மை என்ன ?

## பயிற்சி

1. நள்ளிரவு, தைரியம், நற்குணம், உயர்வு—எதிர்ச் சொற்களை எழுது.

2. சம்பளம், தைரியம், நாணயம், அதிகாலை, வரலாறு—இச்சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. கீழே உள்ள சொற்களின் முதல் எழுத்துக்களை க, ங, ச, ஞ என்ற வரிசையில் அவற்றை எழுது;

தினம், மாளிகை, பேய், காலை, குரல், மூட்டை, பொன், கண்டவுடன், கொண்டாடினர், சம்பளம், தைரியம், நற்குணம்.

——

# 24. யாவரும் ஓர் குலம்

1. ஒற்றைக் குடும்பம் தனிலே—பொருள்
ஓங்க வளர்ப்பவன் தந்தை ;
மற்றைக் கருமங்கள் செய்தே—மனை
வாழ்ந்திடச் செய்பவள் அன்னை.

2. ஏவல்கள் செய்பவர் மக்கள் ;—இவர்
யாவரும் ஓர்குலம் அன்றோ ?
மேவி அனைவரும் ஒன்றாய்—நல்ல
வீடு நடத்துதல் கண்டோம்.

3. சாதிக்கொடுமைகள் வேண்டாம்;—அன்பு
தன்னில் செழித்திடும் வையம் ;
ஆதரவுற்றிங்கு வாழ்வோம்—தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்.

4. அன்பென்று கொட்டு முரசே !—மக்கள்
அத்தனை பேரும் நிகராம் ;
இன்பங்கள் யாவும் பெருகும்—இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால் !

—பாரதியார்.

| | | |
|---|---|---|
| குடும்பம் | செழித்திடும் | வாழ்வோம் |
| மேவி | மனை | ஏவல் |
| ஓங்க | கொடுமை | ஆதரவுற்று |
| அனைவரும் | அன்னை | மக்கள் |
| அன்பு | மாண்புற | கருமம் |
| தந்தை | குலம் | சாதி |
| வையம் | முரசு | நிகர் |
| இன்பம் | பெருகும் | யாவும் |

### கேள்விகள்

1. குடும்பம் எப்படி நடந்து வருகிறது ?
2. இன்பம் எப்பொழுது உண்டாகும் ?

### பயிற்சி

1. கருமம், ஏவல், கொடுமை, இன்பம்—இவற்றிற்குப் பன்மைகளை எழுது.

2. கீழுள்ளவற்றை ஆண்பால், பெண்பால். எனப் பிரித்து எழுது :—தாயார், தந்தை, பாட்டி, தாத்தா, மாமா, மாமி, சேவல், எருது, பசு, பெட்டைக்கோழி.

3, இன்பம், ஏவல், அன்பு, மக்கள், மனை—இச் சொற்களை வாக்கியங்களில் அமைத்து எழுது.

4. நாம் எவ்வாறு வாழவேண்டும் என்பதைப்பற்றி மூன்று வாக்கியங்கள் எழுது.



## 25. கோபு கண்ட கனவு

1. கோபு வீட்டு வாயிலில் வந்து எட்டி எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தான்; தெருக் கோடியில் ஒரு வண்டி வருவதைக் கண்டான். "அம்மா! அம்பா வருகிறார்" என்று குதித்துக்கொண்டே உள்ளே ஓடினான்.

2. தகப்பனார் வண்டியிலிருந்து இறங்கினார். அவருடன் நான்கு பழக்கூடைகளும் இறங்கின. கோபு அவற்றின் அருகில் உட்கார்ந்துகொண்டான். கூடைகளைச் சற்று அவிழ்த்துப் பார்க்க முயன்றான். அவற்றில் பழங்கள் இருப்பது மட்டும் தெரிந்தது. குண்டு குண்டான மாங்கனிகள், பசுமையான பலாப்பழம், சீப்புச் சீப்பாக வாழைப்

பழங்கள் மணி மணியாகத் திராட்சைப் பழங்கள் கூடைகளில் இருந்தன. கோபுவின் நாக்கில் நீர் சுரந்தது.

3. "அம்மா! பழம் கொடு" என்றான் கோபு. தாயார் கூடைகளைத் திறந்து பார்த்தார். "அவ்வளவும் காய்கள். பழுத்தபின் உண்ணலாம்" என்று சொல்லி மூடிவிட்டார். கோபுவுக்கு வருத்தமாக இருந்தது. பழக்கூடைகளைச் சுற்றிச் சுற்றி வந்தான்! தாயார் அவனை அழைத்து உணவு பரிமாறினார். கோபு சாப்பிட்டுவிட்டுப் பின்பு படுத்துக் கொண்டான்.

4. அன்று நள்ளிரவு. கோபு மெதுவாகக் கூடைகளைத் திறந்தான். கையில் ஒரு மாம்பழம் எடுத்தான். அது அவன் கையை விட்டுக் கீழே குதித்தது! கோபு அதைத் துரத்திச் சென்றான். அது கூடையினுள்ளே புகுந்து கொண்டது! கோபு கூடைக்குள் கையை விட்டான். கூடை அவனை உள்ளே இழுத்துக்கொண்டது! கோபு பயந்து நடுங்கினான்.

5. திடீரென்று பழங்கள் யாவும் கோபுவைச் சுற்றி ஆடத் தொடங்கின. அவைகளுக்குக் கால்களும் கைகளும் இருந்தன!

சில பழங்கள் அவனைக் கேலி செய்தன! சில அவனைப் பயமுறுத்தின! கோபு "அம்மா" என்று கூச்சலிட்டான்!

6. தாயார் ஓடி வந்தார். கோபு "அம்மா! பயமாக இருக்கிறது. பழங்களை விரட்டிவிடு" என்றான். கோபு தான் கண்ட கனவைத் தாயாரிடம் சொன்னான். தாயார் இடி இடி என்று சிரித்தார்! "பயப்படாதே கோபு. உன்னைப் பயமுறுத்திய பழங்களை நான் என்ன செய்கிறேன் பார்! அவை நன்றாகப் பழுக்கட்டும், அவற்றை நறுக்கி உனக்குக் கொடுக்கிறேன்," என்று தாயார் சொன்னார். பிறகு கோபு நன்றாகத் தூங்கினான்.

| | | |
|---|---|---|
| தெருக்கோடி | முயன்றான் | சுரந்தது |
| வருத்தம் | அருந்தினான் | வாசல் |
| புகுந்து | திடீரென்று | கேலி |
| பயமுறுத்தின | கூச்சல் | விரட்டு |
| நறுக்கி | கனவு | தொடங்கின |
| பயப்படாதே | | |

**கேள்விகள்**

1. தகப்பனார் என்ன கொண்டுவந்தார் ?
2. கோபு கூடையில் என்னென்ன கண்டான் ?
3. கோபுவுக்குத் தாயார் ஏன் பழம் கொடுக்கவில்லை?
4. கோபு கண்ட கனவு என்ன ?
5. பழங்களைத் தாயார் என்ன செய்வதாகச் சொன்னார் ?

## தெரிந்துகொள்

ஃ—இது ஆய்த எழுத்து. இதை அதிகமாக பயன் படுத்துவதில்லை. ஆனால் சில சமயங்களில் இது என்பதை இஃது என்றும், அது என்பதை அஃது என்றும் சொல்லுவதுண்டு.

### பயிற்சி

1. திடீரென்று கனவு, சுரந்தது, கேலி, வருத்தம்—இச்சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

பிரித்து எழுது :—மாம்பழம், பலாப்பழம், பழக் கூடை, குதித்துக்கொண்டு, தெருக்கோடி.

3. நீ கண்ட கனவு ஒன்றை உன் தாயாரிடம் சொல்லுவது போல் சொல்லு.

4. கீழ்க்காணும் வாக்கியங்களில் பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையும் எடுத்து எழுது.

1. தகப்பனார் பழம் கொண்டுவந்தார்.
2. தாயார் கூடையைத் திறந்தாள்,
3. கோபு தாயாரைக் கூப்பிட்டான்.
4. கோபு கூச்சலிட்டான்.
5. தாயார் சிரித்தார்.



# 26. பரமன் பெற்ற பரிசு

1. குருவிக்குளம் என்ற கிராமத்தில் பரமன் என்றொரு கன்னான் இருந்தான். அவன் பித்தளைப் பாத்திரங்கள் செய்வதில் கைதேர்ந்தவன். அதிலும் மணி செய்வதில் திறமை மிகுந்தவன்.

2. ஒரு சமயம் பரமன் ஒரு நேர்த்தியான மணியைச் செய்து முடித்தான். அவன் சுமார் பத்துமைல் தூரத்திலிருககும் மணிபுரம் என்ற நகரத்திற்கு அந்த மணியை விற்று வரப் புறப்பட்டான். போகும் வழியில் அடர்ந்தகாடு ஒன்று உண்டு. அந்தக் காட்டில் ஒரு கரடி அவனைத் துரத்திக்கொண்டு வந்தது. பரமன் பயந்து, அருகில் இருந்த

ஒரு மலைக் குகைக்குள் ஒளிந்து கொண்டான். ஆனால், அவசரத்தில் மணியைக் கீழே போட்டுவிட்டான்.

3. அங்கு வாழ்ந்து வந்த ஒரு குரங்கு, அந்த மணியைப் பார்த்தது. அது மணியை எடுத்துக்கொண்டு தன் இருப்பிடம் ஓடியது. சிறிது நேரம் சென்ற பின் பரமன் குகையிலிருந்து வெளியே வந்தான். மணியைக் காணுமல் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினுன்.

4. மணியைக் கொண்டு சென்ற குரங்கு, அடிக்கடி 'கண கண' வென்று மணியை ஆட்டிக்கொண்டிருந்தது. மணிபுரத்திலிருந்த மக்கள் மணியோசை கேட்டு நடுநடுங்கினுர்கள். அந்தக் காட்டில் சிங்கம், புலி, கரடி முதலிய கொடிய விலங்குகள் இருந்தன. ஆதலால் அங்கே ஒருவரும் செல்வதில்லை. "மலையில் ஓர் **அரக்கன்** இருக்கிருன். அவன் மணியோசை போன்ற சப்தம் செய்கிருன். மனிதர்களைக் கண்டால் அவன் விழுங்கி விடுகிருன்" என்று ஒருவன் கதை கட்டினுன். அது கேட்ட நகரத்து மக்கள், மேலும் பயந்தனர் சிலர் நகரத்தையே விட்டே ஓடிவிட்டனர்!

5. அந்த நகரத்தை **மணிவல்லபன்** என்ற மன்னன் ஆண்டுவந்தான். "அந்த அரக்கனை எவன் கொல்லுகிருனே அவனுக்கு ஆயிரம்ரூபாய் பரிசு கொடுக்கிறேன்" என்று மணிவல்லபன் பறை சாற்றினன். பரமன் அரசன் ஆணையைக் கேள்விப்பட்டான். உடனே காட்டில் அந்த மலைக்குகையைச் சுற்றிலும் பார்த்தான். ஒரு குரங்கு மணியை ஆட்டிக்கொண்டிருந்தது.

6. பரமன் உடனே ஊருக்குள் போனன். நிறைய வாழைப்பழங்களை வாங்கிக்கொண்டு, மலைமீது ஏறிச் சென்ருன்; குரங்குகளுக்கு எதிரில் நாலாபக்கமும் வாழைப்பழங்களை வீசி எறிந்தான். பரமன் ஒரு மரத்தின் மறைவில் ஒளிந்து கொண்டான். குரங்குகள் எல்லாம் வாழைப்பழங்களைத் தின்பதற்குத் தாவிச் சென்றன. மணியை வைத்திருந்த குரங்கும் அதைக் கீழே எறிந்து விட்டுப் பழத்தை நோக்கி ஓடிற்று.

7. பரமன் உடனே மணியை எடுத்துக் கொண்டு வீடு திரும்பினன். அன்று மாலை அரசனிடம் சென்று "அரசே! அரக்கனை நான் கொன்றுவிட்டேன். இனிமேல் இங்கே மணியோசை கேட்காது" என்று வாக்குறுதி செய்தான். அது முதல் மணிபுரியில் மணியோசை கேட்கவில்லை. **மணி**

வல்லபன் பரமனுக்குப் பரிசாக ஆயிரம் ரூபாய்களைக் கொடுத்தான். மணிபுரத்து மக்கள் பரமனை வாழ்த்தினுர்கள்.

| | | |
|---|---|---|
| கன்னுன் | திறமை | ஆணை |
| இருப்பிடம் | மணியோசை | அவசரம் |
| பரிசு | சாற்றினுன் | மன்னன் |
| பித்தளை | மறைவில் | கேள்விப்பட்டான் |
| பறை | சமயம் | |

### கேள்விகள்

1. கன்னுன் எதில் திறமை மிகுந்தவன்?
2. பரமன் மணிபுரத்திற்கு ஏன் சென்ருன்?
3. மணி எவ்வாறு குரங்குக்கு அகப்பட்டது?
4. மணிபுரத்து மக்கள் மணியோசையை என்னவென்று சொன்னுர்கள்?
5. மணிவல்லபன் என்னவென்று பறைசாற்றினுன்?
6. பரமன் மணியை எவ்வாறு திரும்பப் பெற்ருன்?
7. மன்னனிடம் பரமன் என்ன சொன்னுன்?

### பயிற்சி

1. இருப்பிடம், ஏமாற்றம், திறமை, அவசரம், பரிசு —இச்சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. முடித்தான், போனுன், அவசரம், நகரம், காடு— இச்சொற்களுக்கு எதிர்ச்சொற்களை எழுது.

3. தேவையான இடங்களில் முற்றுப்புள்ளிகளை வைக்கவும்:

பரமன் கைதேர்ந்த கன்னுன் அவன் செய்த மணி நேர்த்தியாக இருந்தது அதை எடுத்துக்கொண்டு நகரை நோக்கிச் சென்ருன் வழியில் அதை எறிந்துவிட்டான் ஒரு குரஙகு அதை எடுத்துக்கொண்டது.

4. அரசன் பறைசாற்றின செய்தியைப் பறை அடித்தவன் சொல்லுவது போல் சொல்லு.

—



# 27. சிங்கமும் முயலும்

(ஒரு நாடகம்)

## காட்சி 1.

இடம் : காட்டில் ஓர் இடம், காலம் : இரவு.

[காட்டில் உள்ள விலங்குகள் யாவும் ஒன்றுகூடின. நரி தலைமை வகித்தது.]

நரி :—நண்பர்களே! சில தினங்களாக நாம் பெரிய ஆபத்திற்கு உள்ளாகி இருக்கிறோம். நம்மைக் கண்டவுடனே சிங்கம் நம்மைக் கொன்று தின்றுவிடுகிறது. இதன் காரணமாக நம்மில் பலர் உயிர் இழந்தனர், இதைத் தவிர்க்க நாம் ஓர் உபாயம் காண வேண்டும்.

**மான்** :—ஆம். இப்படியே விட்டுவிட்டால் நாம் விரைவில் நாசம் அடைவோம். தலைவரே இதற்கு ஓர் உபாயம் சொல்ல வேண்டும்.

**எல்லா விலங்குகளும்** :—ஆம்! ஆம்! அதுவே சரி.

நரி :—தோழர்களே! நம்மில் சிலர் சிங்கத்தினிடம் தூது செல்வோம். தினந்தோறும் அதன் உணவுக்காக ஒரு விலங்கை அனுப்புவதாக ஒப்புக்கொள்வோம். இல்லாவிடில், ஒரே நாளில் நாம் அழிந்துபோவோம். இது உங்களுக்குச் சம்மதமா?

**எல்லா மிருகங்களும்** ;— சம்மதம்! சம்மதம்!

[கூட்டம் கலைகிறது.]

**காட்சி 2.**

**இடம்** : காட்டில் சிங்கத்தின் குகை அருகில்.
**காலம்** : நடுப்பகல்.

[ஒப்பந்தத்தின்படி ஒவ்வொருநாளும் ஒரு விலங்கு சிங்கத்திற்கு இரையாகிக்கொண்டே வந்தது. ஒரு நாள் ஒரு கிழ முயலின் முறை வருகிறது. அது, காலம் தாழ்த்துச் சிங்கத்தினிடம் செல்கிறது. சிங்கம் கடும் பசியுடன் கர்ஜித்துக்கொண்டு இருக்கிறது.]

முயல் :—வணக்கம், ஐயா!

**சிங்கம்** :—(கோபமாக) ஏன் இவ்வளவு தாமதம்?

முயல் :—(நிதானமாக) ஐயனே! தங்களைக்காண விரைந்து வந்து கொண்டிருந்தேன். வரும் வழியில் மற்றொரு சிங்கத்தைக் கண்டேன். அதன் கண்ணில் அகப்படாமல் தப்பித்துக்கொண்டு வருவதற்குத் தாமதம் ஆயிற்று. தயவு செய்து மன்னிக்க வேண்டுகிறேன்.

சிங்கம் :—அற்பப் பதரே! என்ன சொன்னாய்? இந்தக் காட்டில் மற்றொரு சிங்கமா? நீ பொய் சொல்லுகிறாய். அந்தச் சிங்கத்தை எனக்குக் காண்பிப்பாயா? இன்றேல்.......

முயல் :—ஐயா! தங்கள் விருப்பம் போலவே காண்பிக்கிறேன்.

[சிங்கம் முயலைப் பின் தொடர்ந்து செல்கிறது. முயல் சேறும் நீரும் நிறைந்த ஒரு பாழுங்கிணற்றைச் சிங்கத்திற்குக் காட்டுகிறது.]

முயல் :—ஐயனே! நான் சொன்ன சிங்கம் இதன் உள்ளே இருக்கிறது. சற்று எட்டிப் பாருங்கள்.

சிங்கம் :—(எட்டிப் பார்த்துக்கொண்டே) ஆம், ஆம்! திருட்டுப் பயலே! என்னைக் கண்டு ஒளிந்துகொண்டாயா? இதோ உன்னை என்ன செய்கிறேன் பார்!

[சிங்கம் கிணற்றுக்குள் தாவுகிறது. அங்கே சேற்றில் அழுந்தி இறக்கிறது. உண்மையில் தண்ணீருக்குள் சிங்கம் கண்டது தன் நிழலையே.]

முயல் :- ஒழிந்தான் மூடன்! அப்பா! இன்றே நாம் உயிர்பெற்றேம். இந்தத் தந்திரம் செய்யாவிடில், நானும் இதற்குள், இறந்திருப்பேன்; இன்னும் பலர் உயிர் இழப்பார்கள். நல்லகாலம்! [போகிறது]

| | | |
|---|---|---|
| விலங்கு | தாமதம் | ஆபத்து |
| தவிர்க்க | பாழுங்கிணறு | தூது |
| ஒப்புக்கொள் | ஐயா | முறை |
| கடும்பசி | வகித்தது | அற்பம் |
| பின்தொடர்ந்து | நாசம் | நிழல் |
| மூடன் | ஒப்பந்தம் | காரணம் |
| தலைமை | மன்னிப்பு | தோழர் |
| உபாயம் | திருட்டுப்பயல் | தாழ்ந்து |
| சம்மதம் | அகப்படாமல் | பதர் |

கேள்விகள்

1. மிருகங்கள் கூட்டம் கூடி என்ன செய்தன?
2. தாமதத்திற்கு முயல் சொன்ன காரணம் என்ன?
3. சிங்கம் எவ்வாறு இறந்தது?
4. முயல் செய்த தந்திரம் என்ன?

பயிற்சி

1. இந்தக் கதையைச் சுருக்கமாக எழுது?

2. ஆபத்து, கடும்பசி, மூடன், உபாயம், சம்மதம், காரணம், நிழல், அற்பம்—இச் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. இப்பாடத்தில் வந்துள்ள பெயர்ச்சொற்களையும், அவை ஒருமையா பன்மையா என்பதையும் எழுது.

| பெயர்ச்சொல் | ஒருமை | பன்மை |
| --- | --- | --- |
| | | |

4. இந்த நாடகத்தை மௌனமாகப் படித்து நடிக்கவும்.

—




# 28. செய்யுள் பாடம்

## 1. ஆத்திசூடி

1. அறம் செய விரும்பு.
   (கருத்து.) தருமம் செய்.
2. ஆறுவது சினம்.
   (க-து.) கோபத்தை அடக்கு.
3. இளமையில் கல்.
   (க-து.) இள வயதில் படி.
4. ஈவது விலக்கேல்.
   (க-து.) கொடுப்பதைத் தடுக்காதே.
5. ஊக்கமது கைவிடேல்.
   (க-து.) சோர்வு அடையாதே.
6. எண் எழுத்து இகழேல்.
   (க-து.) கல்வியை இகழாதே.

7. ஏற்பது இகழ்ச்சி.
(க-து.) பிச்சை கேட்காதே.

8. ஐயம் இட்டு உண்.
(க-து.) பிறருக்கு இட்டுப் புசி.

9. ஓதுவது ஒழியேல்.
(க-து.) படிப்பை விடாதே.

10. கண்டொன்று சொல்லேல்.
(க-து.) உண்மையை மறைக்காதே.

11. கூடிப் பிரியேல்.
(க-து.) நட்பை விடாதே.

12. கேள்வி முயல்.
(க-து.) கேட்டுத் தெரிந்து கொள்.

13. செய்வன திருந்தச் செய்.
(க-து.) செம்மையாக வேலே செய்.

14. நன்மை கடைப் பிடி.
(க-து.) நன்மையே செய்.

15. நோய்க்கு இடங் கொடேல்.
(க-து.) நோயாளி ஆகாதே.

16. மீதூண் விரும்பேல்.
(க-து.) அளவு மீறி உண்ணுதே.

17. மூர்க்கரோடு இணங்கேல்.
(க-து.) துஷ்டருடன் சேராதே.

18. வல்லமை பேசேல்,
(க-து.) பெருமை பேசாதே.

19. வெட்டெனப் பேசேல்,
(க-து) கடுமையாகப் பேசாதே.

20. வைகறைத் துயிலெழு.
(க-து.) அதிகாலேயில் எழுந்திரு.

# கொன்றை வேந்தன்

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
(க-து.) பெற்றோரை வணங்கு.

2. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
(க-து,) ஊராருடன் ஒத்து வாழ்,

3. எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்.
(க-து.) கல்வியைப் போற்று.

4. ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு.
(க-து.) பொறுமை கொள்ளாதே.

5. கிட்டாதாயின் வெட்டென மற.
(க-து.) வீண் ஆசை கொள்ளாதே.

6. கீழோர் ஆயினும் தாழ உரை.
(க-து.) நயந்து பேசு.

7. கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.
(க-து.) கல்வி அழிவு இல்லாதது.

8. சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.
(க-து.) சோம்பேறியாக இராதே.

9. தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை.
(க-து.) தந்தை சொற் கேள்.

10. தோழனோடும் ஏழமை பேசேல்.
(க-து.) ஏழை என்று சொல்லாதே.

11. நுண்ணிய கருமம் எண்ணித் துணி.
(க-து.) அவசரப் படாதே.

12. பாலோடு ஆயினும் காலம் அறிந்து உண்.
(க-து.) நேரத்தில் உணவு அருந்து.

13. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
(க-து.) பிறருக்கு நன்மை செய்.

14. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.
(க-து.) பெரியோர் சொல் கேள்.

15. மேழிச் செல்வம் கோழை படாது,
(க-து.) பயிர்த்தொழிலே சிறந்தது.

1584 405
600 008.

# தமிழ் எழுத்துக்கள்

(உயிர் மெய் எழுத்து 12)

| மெய் எழுத்து (18) | | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | (உயிர் எழுத்து) | | | | | | | | | | | |
| க் | + | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | + | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | + | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | + | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | + | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | + | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | + | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | + | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | + | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | + | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | + | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | + | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | + | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | + | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | + | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | + | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | + | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | + | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

ஆய்த எழுத்து

ஃ

வடமொழி எழுத்துக்கள்

அ.

ஜ் + ஜ
ஷ் + ஷ
ஸ் + ஸ
ஹ் + ஹ
க்ஷ் + க்ஷ
ஸ்ரீ

7c
RTR/1264

Approved by the Madras Text-Book Committee for Class use
(*Vide Fort St. George Gazette dated 13th May 1953
part 1. Page 28.*)

# PAPPA TAMIL VACHAKAM

## *BOOK III*

By: V. S. LEELA B. A., B. T.

Editor: T. P. MEENAKSHISUNDARANAR
M. A., B. L., M. O. L.

ARUNA PUBLICATIONS
THYAGARAYANAGAR, MADRAS-17.

*Price*] [*Rs.* 0—8—0